# உள்ளூர் திரைப்படத் தொழிலை ஊக்குவிக்க

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 280
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 4 றமழான் 19 வியாழக்கிழமை (19-11-70)

புதிய முறையில் நல்ல தரத்தில் தயாரித்து வெளியிடும் எவர்பிறைற் சோப்பை பாவியுங்கள்.




பிறேமா தொழிற்சாலை - பருத்தித்துறை

## அரசு சங்கற்பம்

## சில வருடங்களுக்கு வரி விலக்கு அளிக்கமுடிவு

கொழும்பு, புதன்

உள்ளூர் பட உற்பத்தியாளர்களுக்கு சில வருடங்களுக்கு வரிவிலக்களித்துவெளிநாட்டுப் படங்களுடன் போட்டியிடக் கூடிய அளவுக்கு உள்ளூர் படங்களின் தரத்தை உயர்த்தவும் பட உற்பத்தியை அதிகரிக்கவும் அரசாங்கம் சகல உதவிகளையும் உள்ளூர்பட உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் என தகவல் ஒலிபரப்பு அமைச்சர் ஆர். எஸ். பெரேரா தெரிவித்துள்ளார்.

'தமிழ் சிங்களப் படங்களின் தரத்தை உயர்த்துவது மட்டுமல்ல அவற்றுக்கு வெளிநாடுகளில் சந்தை வசதிகள் கிடைப்பது பற்றியும் ஆராயப்பட்டுவருகின்றது. உள்ளூர் படங்களுக்கு பரிசுகள் நிதிஉதவிகள் கொடுப்பதற்கு சகல உதவிகளும் அரசாங்கம் வழங்கும் படத்துறையில் உள்ளவருக்கு தொழில் நுட்பபயிற்சி பெறத்தக்க வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். உள்ளூர் படங்களின் தரத்தை வெளிநாட்டு படங்களின் தரத்துடன் சமமட்டத்திற்கு கொண்டுவருவதற்கான எல்லாமுயற்சிகளும், உதவிகளும் செய்து கொடுக்கப்படும்' இவ்வாறு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

நிறுவப்படஇருக்கும்திரைப்பட கார்ப்பரேஷன் பற்றிக் குறிப்பிடுகையில் அதிவிரைவில் கார்ப்பரேஷன் நிறுவப்படும் எனவும் மந்திரிசபை இதற்கான அங்கீகாரத்தை வழங்கிவிட்டது எனவும் தெரிவித்தார். இந்தக் கார்ப்பரேஷன் பட இறக்குமதி விநியோகம் ஆகியவற்றைக் கையேற்று நடாத்தும்.

# சோஷலிஸ நாடுகளிலிருந்து ரூ. 10 கோடிக்கு கடன் வசதி

## சீன, ரஷ்ய அரசுகள் அதிக உதவி வழங்கும்

கொழும்பு, புதன்

சோஷலிஸ நாடுகளிலிருந்து மீண்டும் இலங்கைக்கு நிதி, பொருளாதார உதவிகள் தாராளமாகக் கிடைக்கும் அறிகுறிகள் பலமடைந்துவருகின்றன

திருமதி பண்டாரநாயக்காவின் புதிய அரசு ஏற்பட்டபின்னர் வெளிநாடுகளிலிருந்து கிடைத்துள்ள சுமார் 15 1/2 கோடி ரூபா மதிப்புள்ள உதவிகளில் 10 கோடி ரூபாய்க்கான உதவிகள் சோஷலிஸ நாடுகளிலிருந்தே கிடைத்துள்ளன. இவைகளில் சோவியத் ...

மேற்கொண்டும் உதவி வழங்குவதற்கு உறுதியளித்திருக்கின்றன.

கிழக்கு ஜெர்மனி, வட கொரியா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளும் கடன் வசதிகளையும், நிதி உதவிகளையும் அதிகரிப்பதற்கு முன்வந்துள்ளன.

சோவியத் யூனியன் கிழக்கு ஜெர்மனி, யூகோஸ்லா[illegible] போன்ற நாடுகளுக்கு அண்மையில் விஜயம் செய்துவிட்டு நாடு திரும்பிய வெளி[illegible] சர் தி[illegible] சோஷலிஸ நாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகள் மிக ...

கிடைக்கவிருக்கும் உதவிகள் பற்றிய முழுவிபரமும் விரைவில் ஆட்சிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

இவைகளுடன் மேற்கு நாடுகளான கனடா, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலிருந்து தொடர்ந்து உதவிகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கனடாவிலிருந்து 1 கோடி 70 லட்சம் ரூபாய்க்கான [illegible] மாவும், அமெ[illegible]விருந்து ரூபா 1 கோடி 90 லட்சத்துக்கான கோதுமைமாவும் கிடைக்க...

## 'தீவுப்பகுதிக்கு ஏழு ப.நோ.கூ.சங்கங்கள்வேண்டும்'

வேலணை, புதன்

தீவுப்பகுதிகளில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை திருத்தியமைக்கும்போது ஏழு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுமாறு ஊர்காவற்றுறை எம். பி. வர்த்தக அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்மகஜரில் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு எழுவைதீவு, புங்குடுதீவு ஆகியனவற்றிற்கு தனிச்சங்கங்களையும், நாரந்தனை, ஊர்காவற்றுறைக்கு ஒரு கூட்டுச் சங்கத்தையும், வேலணை-அல்லைப்பிட்டி- மண்டைதீவு ஆகிய மூன்றிடங்களுக்கு இணைப்புச் சங்கத்தையும் அமைக்குமாறு மகஜரில் விவரிக்கப்பட்டுள்ளது.

## 'யாழ். தச்சுதொழிற்சாலையை மூடாதீர்'

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அரசாங்க தச்சுத் தொழிற்சாலை மூடப்...

## 13 வயது சிறுமி மரணம்

# நள்ளிரவில் கடைக்குள் ஏற்பட்ட வெடிவிபத்து

## ஆபத்தான நிலையில் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

மட்டுவில், புதன்

பூட்டப்பட்டிருந்த கடைக்குள் நள்ளிரவில் இறங்கியவர் திடீரென அங்கு டைனமைற் வெடித்ததால் ஏற்பட்ட காயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

சாவகச்சேரியிலுள்ள பிரபல கடையொன்றில் தான் இச்சம்பவம் நிகழ்ந்தது.

நேற்று மாலை கடையைப் பூட்டிக்கொண்டு உரிமையாளர்கள் சென்ற பின் நள்ளிரவின்போது திடீரென கடைப் பக்கித்த... கேட்டதாகவும் இதைத் தொடர்ந்து "என்னைக் காப்பாற்றுங்கள்" என்ற கூக்குரல் கேட்டதாகவும் கூக்குரலைக் கேட்டு அங்கு விரைந்து சென்றவர்கள் ஒருவர் பலத்த காயங்களுடன் கிடக்கக் கண்டு பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்ற சாவகச்சேரிப் பொலிசார் காயமடைந்தவரை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். பின்னர் அவர் அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

... கூரையும் கதவுகளும் சேதமடைந்துள்ளன. ஹக்வெல பொலிஸ் பகுதியைச் சேர்ந்த எதிரிசிங்ககாமினி என்பவரே காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

விபத்து நேர்ந்த கடை டைனமைற் மற்றும் வெடி மருந்துகள் விற்பதற்கு லைசன்ஸ் பெற்றதாம். கடைக்குள் திருடுவதற்காக நுழைந்து தீக்குச்சி தட்டியபோது இவ்வெடி விபத்து நேர்ந்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது.

சாவகச்சேரிப் பொலிசார் விசாரணை செய்து ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அரசாங்க தச்சுத் தொழிற்சாலை மூடப்பட்டதை ஆட்சேபித்து யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஸி. எக்ஸ். மார்ட்டின் தொழில் மந்திரி எம். பி. டி. இசற், சிறிவர்த்தனவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்

இத்தச்சுத் தொழிற் சாலையை வேறு இடங்களுக்கு மாற்றஞ் செய்யவோ மூடவோ வேண்டாம் எனவும் உடனடியாகத் திறக்கும்படியும் அக்கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கின்றது

## 13 வயது சிறுமி மரணம்

பருத்தித்துறை, புதன்

நேற்று முன்தினம் சங்கானை-சாவகச்சேரிப் பாதையில் ஓடிக்கொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று புத்தூர்ச் சந்தியில் சி. பவளமலர் என்னும் 13 வயது சிறுமியை மோதியதால் அச்சிறுமி ஸ்தலத்திலேயே மரணமானார். இவ்விபத்துக் காரணமாக சில மணித்தியாலங்கள் இவ்வீதியில் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது.

உதவிகள் சோஷலிஸ நாடுகளிலிருந்தே கிடைத்துள்ளன. இவைகளில் சோவியத் யூனியனிடமும், சீனாவிடமுமிருந்துமட்டும் தலா ஐந்து கோடி ரூபாய்க்கான கடன் உதவிகள் கிடைத்துள்ளன. இத்துடன் பழைய ஒப்பந்தங்களைத் தொடர்ந்து செயற்படுத்துவதன் மூலம் துணி ஆலைநிறுவுவதற்கு 4 கோடி ரூபாயும், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த நினைவு மண்டபத்துக்காக 3 கோடி 50 லட்சம் ரூபாயும் சீனா வழங்கியிருக்கின்றது.

இந்த இரு நாடுகளும், பிய வெளிவர்த்தக அமைச்சர் திரு. ரி.பி.இலங்கரத்ன சோஷலிஸ நாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகள் மிகவும் திருப்தியளிப்பவையாக விருப்பதாகக் கூறினார். கடந்த மாதம் அவர் சீனு வுக்கும், வடகொரியாவுக்கும் போய்வந்தார்.

இந்த நாடுகளிலிருந்து கோதுமை மாவும், அமெரிக்காவிலிருந்து ரூபா 1 கோடி 90 லட்சத்துக்கான கோதுமைமாவும் கிடைக்கின்றது. பாடசாலை பகல் போசனத்துக்கான 2 கோடி 5லட்சம் ரூபாய் அமெரிக்க கடன் உதவி தொடர்ந்து கிடைக்கும் என்று தெரிகின்றது. (சி.பி.ஏ)

யாளர்கள் சென்ற பின் நள்ளிரவின்போது திடீரென கடைப்பக்கத்திலிருந்து வெடிச்சத்தம்

அங்கிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டார். கடையின் உட்பகுதியும்

கிறது. சாவகச்சேரிப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர்.

# பரந்தன் கூட்டுத்தாபன ஒரு டைரக்டர் ராஜிஞமா

## தலைவர் மீது துரைராஜா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், வியாழன்

பரந்தன் ரசாயன கூட்டுத்தாபன தலைவர், அரசியல் வட்டாரங்களில், ஒரு பிற்போக்குவாதி யென்பதும் தொழிலாளி வர்க்கத்தினருக்கு எதிரானவரென்பதும், பகிரங்கரகசியம் 1956ம் ஆண்டு முதல் பண்டாரநாயக்காவின் கொள்கையை பின்பற்றுகிறவர் என இன்று கூறப்பட்ட போதிலும், அவர் ஒரு ஐக்கிய தேசிய கட்சியின் முன்னணி ஆதரவாளராகும். இத் தலைவர் தொடர்ந்து பதவியிலிருக்கும் வரை நாட்டின் நன்மைக்காக எவ்விதபணியும் செய்ய முடியாது. இப்படியான ஒரு நிர்வாகத்திற்கு நான் உடந்தையாக இருக்க விரும்பவில்லை.

பரந்தன் ரசாயன கூட்டுத்தாபன டைரக்டர் பதவியிலிருந்து ராஜிஞமாசெய்து கொண்ட, ஸ்ரீலங்காசுதந்திர கட்சி யாழ்மாவட்டஅமைப்பாளர் திரு. எம். துரைராஜா, தமது ராஜிஞமா கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ள ராஜிஞமா கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது கீழ்க்காணும்காரணங்களுக்காக நான் பரந்தன் ரசாயன கூட்டுத் தாபன டைரக்டர் பதவியிலிருந்து ராஜிஞமா செய்கிறேன்.

நிதிகளில் ஒழுங்கீனங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. உதாரணமாக கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கார்கள் தனிப்பட்ட முறையில் பாவிக்கும்வழக்கம் தொடர்ந்து இருந்து வருகிறது. கண்டி பெரகராவின் போது அங்கு சென்ற சமயம் நடந்த கார் விபத்தினல், கூட்டுத்தாபனத்திற்கு 1600 ரூபா செலவு ஏற்பட்டது. டயரக்டர்களின் அங்கிகாரமின்றி செலவுகளில் அதிகமானவை, சில்லறை செலவு பணத்திலிருந்து செலவழிக்கப்படுகிறது.

விசாரணைக் கமிஷன்ஒன்று நியமித்தால் நியமனம், பதவி உயர்வு சம்பந்தமான ஒழுங்கீனங்கள் வெளிவரும். அதுமட்டுமன்றி, மாதம் 20,000 ரூபாவாக அதிகரித்துள்ள சில்லறைச் செலவு பணம் சம்பந்தமான விஷயங்களும் வெளிவரும், தகைமையுடைய ஒருவரைக் கணக்காளராக நியமிக்க வேண்டுமெனவும் தகுதியானவரைத் தெரிவுசெய்வதில் நானும் கலந்துகொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளதை இச்சந்தர்ப்பத்தில் அவசியம் கூறவேண்டியுள்ளது. இவ்வாறு நான் கூறியிருந்தும் கணக்காளரைத் தெரிவதில் தலைவர் எதேச்சாதிகாரமுடையவராக நடந்துள்ளார். எனக்கு ஒன்றும் தெரிவிக்காமல் இம்மாதம் 11-ம் திகதி விண்ணப்பதாரிகளை நேர்முக பரீட்சைக்கு அழைத்துள்ளார் தலைவரின் இத்தகைய செயல்களுக்கெல்லாம் நான் தலையசைப்பவராக இருக்க விரும்பவில்லை.

கடந்தகாலத்தில் மேற்படி தலைவரின் நடவடிக்கைகள் குறித்து விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமித்தால் தலைவரின் நடவடிக்கைகள் யாவும் வெளிப்படையாகத் தெரியவரும். கூட்டுத்தாபனப் பணமெல்லாம் வீணான வழியில் விரயமாகியுள்ளது.

## தேயிலைக்கார்ப்பரேஷன் நிறுவப்படும்

கொழும்பு, புதன்

தேயிலை விற்பனையில் உள்ள நிலைமையைச் சீர் செய்ய டாக்டர் கொல்வின் ஆர். டி, சில்வா நடவடிக்கை எடுத்துள்ளார் தேயிலை விசாரணைக்கமிஷனின்சிபார்சுகள் படிப்படியாக அமுல் செய்யப்படும் எனவும் தற்போதைய நிலைகளில் ஏற்படும் நெருக்கடியிலிருந்து உற்பத்தியாளருக்கு தவிர்க்கமுடியாதளவு பாதுகாப்பு கொடுக்கவும், சந்தையின் ஏலவிற்பனையைத் தளப்பானநிலையிலிருந்து தவிர்க்கவும் தேயிலைக் கைத்தொழிலுக்குத் தனியே ஒரு கார்ப்பரேஷன் நிறுவப்படும் என டாக்டர்கொல்வின்கூறினர்.

இத்தகைய நடவடிக்கையால் இலங்கையில் தேயிலை உற்பத்தி யாளர்களிடையே ஊக்கத்தை உண்டுபண்ணுவதுடன் ஏலவிற்பனையில் தனி ஆதிக்கம் செலுத்துவோரின் ஏகபோக உரிமையையும் உடைததெறியமுடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேயிலை வர்த்தகத்தைத் தேசியமயமாக்கிய நாடுகளுக்கு தேயிலைபற்றிய பேச்சுவார்த்தை நடக்கும்போதும் உள்நாட்டுத் தேயிலை விநியோகத்திலும் உத்தேச தேயிலைக் கார்ப்பரேஷனின் பங்கு முக்கியமானதாக இருக்கும்.

## துரையப்பாவின் 2-வது விண்ணப்பமும் நிராகரிப்பு

கொழும்பு, புதன்

யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணையை ஒத்திவைக்கும்படி அல்பிரட் துரையப்பாவின் சார்பில் இன்று 2ம் தடவையும் அவரது வழக்கறிஞர் திரு ஈ.ஆர். எஸ். குமாரசாமி கியூஸி சமர்ப்பித்த மருத்துவச் சான்றிதழுடனை விண்ணப்பத்தை நீதியரசர் பண்டுத குணவர்த்தன நிராகத்தார்.

கொழும்பு உயர்நீதிமன்ற சேம்பரில் வைத்து இந்த விண்ணப்பம் தாக்கல்செய்யப்பட்டது. இந்தியாவில் தற்போது தங்கியிருக்கும் திரு துரையப்பா சுகயீனமாக இருப்பதாக அங்குள்ள வைத்திய நிபுணரின் மருந்துவச் சான்றிதழ் ஒன்றையும் அவரின் வழக்கறிஞர் தாக்கல்செய்தார். இந்த மருத்துவச்சான்றிதழை ஏற்றுக் கொள்ளமுடியாதென நீதியரசர் நிராகத்தார்,

எதிர்மனுதாரரான யாழ்ப்பாண எம் பி திரு சி எக்ஸ்மாட்டினுக்கும், யாழ்ப்பாண தொகுதியில் போட்டியிட்ட மற்றொரு அபேட்சகரான திரு ஜி ஜி பொன்னம்பலம், முடிக்குரிய வழக்கறிஞர் ஆகியோரின் சட்டப்படியான செலவுத் தொகையை (டாக்ஸ் கோஸ்ற்) மனுதாரைக்கட்டும்படி நீதியரசர் உத்தரவிட்டார்:

முன்னரும் மனுதாரன திரு துரையப்பா ஒத்திவைக்கும்படி இந்தியாவிலிருந்து அனுப்பிய மருத்துவ சான்றிதழ் நிராகரிக்கப்பட்டது தெரிந்ததே. இம் மாதம் 25ம் தேதி யாழ்ப்பாணத்தில் யாழ் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணை நடக்கவிருக்கிறது.

# 35 மாணவர்கள் அனுமதிபற்றி கல்வி அமைச்சர் அறிக்கை

கொழும்பு, புதன்

'சென்ற வருடம் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிகிடைக்காத மாணவர்களுக்கு ஏற்பட்ட அநீதியைப் போக்கவே அம்மாணவர்கள் 35 பேரையும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கும்படி உத்தரவிட்டேன்: அவர்கள் சென்ற வருடம் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெருதது மட்டுமல்ல இம்முறை அனுமதி கிடைக்குமென நம்பியிருந்தார்கள்'.

இவ்வாறுகல்வி அமைச்சரினல் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் அனுமதி கிடைக்காத 35 பேரையும் இம்முறை பல்கலைக்கழகத்திற்குஅனுமதிக்கும்படிகல்வி அமைச்சர் திரு. பதியுதீன் மக்மூத் உத்தரவிட்டிருந்தார்: பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது பற்றி முடிவு செய்ய தேசிய உயர்கல்விச்சபைக்கும் பல்கலைக்கழக செனட்டருக்குமே உரிமை உண்டு. அமைச்சருக்கு எவ்வித உரிமையுமில்லையென்று தேசிய உயர் கல்விச் சபையும் பேராதனைப் பல்கலைச்கழக செனட்டும் கல்விஅமைச்சரின் உத்தரவை நிராகரித்தன

இதுபற்றி விளக்கியே அமைச்சர்மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார், அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- சென்ற வருடம் சராசரி 47.5 புள்ளிகள் எடுத்த 285 பேரில் பல்கலைக்கழகம் 250 பேரையே அனுமதித்தது. மிகுதியுள்ள 35 பேருக்கும் இதனல் அநீதி ஏற்பட்டது இக்குறையை நீக்கவே நான் உத்தரவிட்டேன்

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதில் எல்லைக்குட்பட்ட நிலையையே கடைப்பிடிக்க வேண்டும் இப்பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள மாணவர்களுக்கு வசதிகள்செய்து கொடுக்கப்படவேண்டும் கலைப்பகுதியில் 10 மைல் சுற்றியுள்ளமாணவர்களுக்கு 25வீதமான இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன இதனல் கம்பளை, மாவனெல்லை, அக்குறணை ஆகிய பகுதி மாணவர்களுக்கு உதவவே இவ்விதம் வகுப்புவாதத்தில் உண்மையில்லைபிரதேச எல்லை கணிக்கப்படும்போது 6 முஸ்லிம் மாணவராகுதல்பயனடையவில்லை

கலைப்பிரிவு கீழைத்தேச மாணவர்கள் நான்கு பல்கலைக்கழகங்களில் சமமாக இடம் பெறுவர் என அவ்வறிக்கை மேலும் தெரிவித்துள்ளது

......

## ஆளை மோதிவிட்டு கார் மறைந்ததாம்

வேலணை, புதன்

காரினல் மோதுண்ட ஒருவர் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மண்கும்பான் வேலணை வீதிக்கிடையிலுள்ள அராலிச்சந்தி மதவடியில் நடைபெற்றது. மண்கும்பான்வாசியாகிய ஐயாத்துரை யென்பவர் மேற்படி மதகுக்கு அண்மையில் சைக்கிளில் வரும்போது காரினல் மோதுண்டார். அவரை மோதிய கார் நிற்காமலே ஓடி மறைந்துவிட்டதாம். மோதுண்டவர் எழுந்து மெதுவாகச் சைக்கிலில் வீடு சென்றதாகவும், பின்னர் மயக்கமுற்று ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

# யூகோஸ்லாவிய சோஷலிஸ முறையை பின்பற்றலாம்

## எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர். யோசனை

கொழும்பு, புதன்

'கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவ நாட்டின் அரசியல் சட்டத்தையும் சம்பிரதாய மரபுகளையும் முறையாகப் பின்பற்றி சகலருக்கும் திருப்தியளிக்கும் வகையில் பணியாற்றி வருகிறார்.'

இவ்வாறு காலித்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் டாக்டர் டபிள்யூ. தஹநாயகா பாராட்டுத்தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டம் பிரதிநிதிகள் சபையில் கமிட்டி நிலையில் ஆராயப்பட்டபோது கவர்னர் ஜெனரல் செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீட்டின்மீது டாக்டர் தஹநாயகா பேசினர்

டாக்டர் தஹநாயகாவின் இந்தப் பாராட்டைச் சபை உறுப்பினர்கள் ஆரவாரம் செய்து வரவேற்ருர்கள். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது!-

'இராணிமாளிகை அநேகமாக எல்லா நேரமுமே வெறிச்சோடிக் கிடக்கிறது. அதுதேவைக்கு அதிக விசாலமான கட்டிடம். புதிதாகக் குடியரசுத் தலைவர் தெரிவு செய்யப்படும்போது உயர் தரமான ஒரு வாஸஸ்தலத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும். இராணி மாளிகையை வேறு பயனுள்ள காரியங்களுக்கு பயன்படுத்த வேண்டும்.'

### எஸ். ஜே.வி. பேச்சு

காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு.எஸ் ஜே.வி.செல்வநாயகம் பேசுகையில் டாக்டர் தஹநாயகாகூறிய கருத்துக்களை ஆமோதித்தார். திரு. கோபல்லாவ இன்னும் எவ்வளவு காலம் பதவியிலிருக்கப்போகிறார். நாட்டின் மிக உயர்ந்த பதவியொன்றை ஒருவர் நீண்டகாலம்வகிப்பது அவ்வளவு சிறந்ததல்ல' என்றுகூறினர்.

பிரதமர் குறுக்கிட்டு கவர்னர் ஜெனரல் மகாராணியின் விருப்பத்திற்கிணங்கவே இராணிமாளிகையில் இருக்கிருர் என்ருர். இதற்கு பிரதமரின் ஆலோசனையின் பேரிலேயே மகாராணி செயல்படுகிருர் என திரு. செல்வநாயகம் சுட்டிக்காட்டினர்.

### நிதியமைச்சர்

நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா விவாதங்களுக்குப் பதிலளித்துப் பேசுகையில் நாட்டின் தலைமைப் பதவியை வகிக்கும் கவர்னர் ஜெனரல் வெளிநாட்டிலிருந்து வருகை தரும் முக்கிய பிரமுகர்களை வரவேற்று உபசரிக்க வேண்டியிருக்கிறது. சேரியிலிருந்து கொண்டு இப்படியான வரவேற்புகளைச் செய்வது உசிதமல்ல. நாட்டின் மதிப்புக்கேற்றவகையில் கவர்னர் ஜெனரலின் வாசஸ்தலமும் மதிப்பாய் இருக்கவேண்டும் என விளக்கினர்.

மானியம் நிறைவேறியது.

### பிரதமர்இலாகா மானியம்

பிரதமமந்திரியின் இலாகாக்களுக்கான ஒதுக்கீடுகள் மீது நடைபெற்றவிவாதத்தில் எதிர்க்கட்சி தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில் அரசாங்கம் சோஷலிஸக் கொள்கைகளைத் தாராளமான முறையில் பின்பற்றிவரும் யூகோஸ்லாவிய நாட்டின் மாதிரியைப்பின்பற்ற வேண்டும் என்ருர்.

யூகோஸ்லாவியாவில் 80 சதவீத விவசாயநிலங்கள் தனியார் துறையில் இருந்து வருவதாகவும் இதர கம்யூனிஸ்ட் நாடுகளைவிட அங்கு அதிக செயல்சுதந்திரம், இருப்பதாகவும் திரு ஜே. ஆர். சுட்டிக்காட்டினர்.

பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பதிலளித்துப் பேசுகையில் "எமது அரசாங்கம் வேறு எந்த நாட்டுச் கொள்கைகளையும் பின்பற்ற உத்தேசிக்கவில்லை; இலங்கைக்குப் பொருத்தமான பண்டாரநாயக்காவின் கொள்கை எம்மிடமிருக்கிறது" என்ருர்.

மானியப் பிரேரணைகள் நிறைவேறின. (சி பி ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


**விற்பனைக்கு**

நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க. பொ. மாணிக்கவாசகர், ஆசிரியர், 29, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 2512

கொழும்புத்துறை யோகர் சுவாமிஜியின் சமாதிக்கு அண்மையில், சுவாமியார் வீதியில் உபதபாற்கந்தோர். புங்கன்குளம் புகையிரத நிலையம் ஆகியவற்றிற்குமிக அண்மையில் கொழும்புத்துறை - யாழ்ப்பாண பஸ் வீதியில் உள்ள 4 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு பரப்பு 6,500 ரூபாவுக்கு மேலாகக் கோருபவர்கள் விண்ணப்பிக்கவும்- 25A புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 2520


## "பாரதி ஒரு வைத்தியன்"

யாழ்ப்பாணம், புதன்

ஒரு வைத்தியர் நோயாளியின் நாடியைப் பார்த்து பித்தம், சிலேற்பனம் ஆகியவற்றை அறிந்து நோயை நீக்குவது போல எங்கள் பாரதியார் ஒரு 'பரியாரியாக' நாட்டிலுள்ள ஊழல்களை அறிந்து அவற்றை நீக்க முற்பட்டார் மக்களுக்கு வீரம் ஊட்டிய இவர் தேச விடுதலைக்கு நன்ருய் பாடுபட்டார் என பண்டிதர் ச. இராமச்சந்திரன் யாழ்ப்பாண மத்தியகல்லூரித் தமிழ் மன்றம் நடாத்திய பாரதிவிழாவில் உரையாற்றியபோது கூறினர்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய தமிழ்மன்ற இயக்குநர் திரு. சண்முககுமரேசன் பேசுகையில், பாரதியாரின் கவிதைகள் எளிமையாயமைந்தபடியால் மக்கள் சுலபமாக அவற்றைப் படித்து விளங்கிக்கொள்கிருர்கள். அன்னரின் கவிதைகளில் வீரமும் காதலும் பிரதான சுவைகளாக அமைந்துள்ளன என்ருர்.

செல்வன் செய்வேந்திரன் நன்றியுரை கூறினர். செல்வன் ஆனந்தபிரசாத் பாரதியாரின் பாடல்கள் சிலவற்றைப் பாட செல்வன் நவரத்தினராசா மிடுதங்கம் வாசித்தார்.

## அறிவித்தல்


சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க விசேஷ பொதுக்கூட்டம் 21-11-70 மாலை 4-30 மணியளவில் மேற்படி வித்தியாலய மண்டபத்தில் நடைபெற இருக்கின்றது. பழைய மாணவர்கள் அனைவரும் தவருது கூட்டத்திற்குச் சமுகம் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

S. S. குலநாயகம்,
2559 செயலாளர்.


## நகல் மசோதா அங்கீகரிக்கப்பட்டது

கோட்டை, புதன்

அரசாங்க திரைப்படக் கூட்டுஸ்தாபன மொன்றை நிறுவுவதுபற்றி தகவல் ஒலிபரப்பு அமைச்சர் தயாரித்தளித்த நகல் மசோதாவை மந்திரிசபை அங்கீகரித்துள்ளது.


**வெலிசினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
எம். ஜி.ஆர்—ஜெயலலிதா நடித்த
**முகராசி**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
ஜெமினி- சரோஜாதேவி நடித்த
**பனித்திரை**

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45p m.
Poya days 4 shows
Kerwin Mathews
in
CRACK IN THE WORLD

REGAL
Jaffna
Daily 10-00 a.m.
4-00 & 8-00 p.m.
Omar Sharif
Julie Christie
in
DOCTOR ZHIVAGO

ராஜா (யாழ்ப்பாணம்) ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா; சோ — மனேரமா


## உதை பந்தாட்டம்

# கொக்குவில்-மகாஜன இவ்வருட இணைப்புச் சாம்பியன்கள்

யாழ்ப்பாணம், செவ்,

யாழ்ப்பாணக் கல்லூரிகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திய முதற்பிரிவு உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி கொக்குவில் இந்துக்கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளும் இவ்வருட இணைச் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

கடந்தவாரம் மேற்படி இரு கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றமையால் நேற்று மீண்டும் இரு கல்லூரிகளும் ஆட்டத்தில் கலந்து கொண்டன.

இரண்டாவது ஆட்டத்திலும் இருகல்லூரிக் கோஷ்டிகளும் 1—1 கோல்களைப் பெற்று ஆட்டம்முடிவடைந்தமையால் விளையாட்டுச் சங்க விதிகளின்படி இரு கோஷ்டிகளும் இணைச் சம்பியன் விருதுபெற்றன.

வடமாநிலக் கல்வி அதிபர் திரு வி. சங்கரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். எல். கே. எஸ் சுற்றுக்கிண்ணம் கண்ணுசுற்றுக்கேடயம் என்பன இரு கல்லூரிகளுக்கும் வழங்கப்பட்டன.

முதல் ஆறுமாதத்துக்கு சுற்றுக்கிண்ணத்தை வைத்துக்கொள்ளும் உரிமை பூவா, தலையா சுண்டிப் பார்த்து மகாஜனக் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

இப் போட்டிக்கு திரு நா சோமசுந்தரம் மத்தியஸ்தம் வகித்தார். திருவாளர்கள் ஞானப்பிரகாசம் கனகலிங்கம் ஆகியோர் உதவி புரிந்தனர்.

## அன்பளிப்பு

கோட்டை, புதன்

14000 தொன் கோதுமை மாவையும் 300 தொன் விதை உருளைக்கிழங்கையும் ஜெர்மன் சமஷ்டிக்குடியரசு இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யவுள்ளது.

1967-ம் ஆண்டு செய்யப்பட்ட சர்வதேச தானிய ஒப்பந்தத்தின்கீழ் இந்நன்கொடை வழக்கப்படவிருக்கிறது.

## நிர்வாகிகள்

அம்பன், புதன்

வல்லிபுரக்குறிச்சி கிராம முன்னேற்றச் சங்க நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போஷகர்: திரு வே கோபாலகிருஷ்ணன், தலைவர்: திரு இரா கிருஷ்ணராசா, உபதலைவர்: வ சபாரட்ணம், இணைச் செயலாளர்கள் திரு மு பச்சைமால் மருகன், திரு ச சச்சிதானந்தமூர்த்தி, தனதிகாரி:

# 55 வயதுக்கட்டாய ஓய்வை நீக்க அதிபர்கள் கோரிக்கை

பருத்தித்துறை, புதன்

"பல மத்திய மகாவித்தியாலயங்கள் இன்று சிறந்து விளங்குவதற்குக் காரணகர்த்தாக்களாக விளங்கும் அதிபர்களை 55 வயதுடன் கட்டாய ஓய்வுபெறச்செய்வதன் மூலம் சிறந்த கல்வி அனுபவத்தையும் ஆற்றலையும் கல்வித்துறை இழக்கநேரிடும்"

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றை முதலாந்தர அதிபர் சங்கச்சார்பாக அதன் செயலாளர் திரு. டபிள்யூ டி. பி. திலகரத்ன கல்வி அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்' மேலும் அம்மகஜர்கூறுவதாவது:-

'பல்கலைக்கழகங்களுக்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் பிரவேசிக்கும் மாணவருக்கு ஆங்கில அறிவு கட்டாயமாயிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கிவிட்டு பாடசாலைகளில் திறமைவாய்ந்த ஆசிரியரிடம் ஆங்கிலப் போதனைமை ஒப்படைத்தல் வரவேற்கத்தக்கது இவ்வித விசேட பாடங்கள் சரிவரப் போதிக்கப்படுகிறதா என்பதை அறிவதற்கு இன்றுள்ள வட்டாரக் கல்வியதிகாரிகளை விடுத்து ஆசிரிய பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளரையும் மத்திய மகாவித்தியாலய அதிபர்களையும் இடைக்காலங்களில் நியமித்தல் சிறந்தது''.

மேலும் மாணவரிடம் சேவை வசதிக் கட்டணம் வசூல் செய்யும் முறையை நீக்கிவிட்டு அவ்வித வசதிகளைச்செய்யும் பொறுப்பை உள்ளூராட்சி மன்றங்களிடம் விடுவது உசித்மானது.

ஆசிரியர் இடமாற்றம் கல்வி, நிர்வாகம். ஆலோசனைக் குழுக்கள் ஆகியன பற்றியும் மகஜரில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

கார்த்திகைமாதம் 4-ந்திகதி

(19-11-70)

மேஷம்- பூமி விருத்தியுடன் புதிய தொடர்புகளும் பெருகும். அரசாங்க ஊழியராயின் உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு.

ரிஷபம்- நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும். சுற்றுடலில் மதிப்பு உயரும்.

மிதுனம்- துன்பத்தின் நிலாட்டம் உங்களைத் தொடரும், சிறிய தலையிடிக்கும் இடமுண்டு.

கடகம்- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். ... குப் பதவிஉயர்வு ... ம்.


## காரை. மணிவாசகர் சபை நிர்வாகிகள்

காரைநகர், புதன்

காரைநகர் மணிவாசகர் சபையின் முப்பதாவது வருடாந்தக்கூட்டம் திரு. செ. இராசையா தலைமையில் நடைபெற்றபோது, பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு செ. இராசையா. உபதலைவர்கள்: திரு அ தம்பையா, திரு நா கனகசுந்தரம். இணைக்காரியதரிசிகள்: திரு வே செல்வநாயகம், திரு மு நாகராசா, தனதிகாரி: திரு ச முருகேசு, 12 பேர் கமிட்டி உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## நாவலர் வித்தியாலய பழைய மாணவர் சங்கம்

# தொண்டும்கடமைஉள்ளமும் கொண்ட 'பாலா'



'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவ இலக்கணத்திற்கமைய அமரரான திரு. க. பாலசுப்பிரமணியம்27-7-1922ல் யாழ்ப்பாணம் - பன்னலையில் அவதரித்தார். 1945-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15-ந் திகதி சுகாதார இலாகாவில் பரிசோதகராக நியமனம் பெற்ருர். சேவைத் திறன், அயராத உழைப்பின் பெருமை காரணமாக 2-3-54 தொடக்கம் பிரசார உத்தியோகஸ்தராகப் பதவி உயர்வு பெற்ருர். நாவன்மை, சொல்லாட்சி நலன் கண்டு 15-8-1956 தொடக்கம் சுகாதார போதனசிரியராக அமர்த்தப்பட்டார்.

1959-ம் ஆண்டு அரசாங்க நன்கொடைப் பணத்துடன் வட அமெரிக்காவிலுள்ள யேல் சர்வகலாசாலையில் பொதுச் சுகாதாரத் துறையில் மேற்படிப்பை ஆரம்பித்தார். அவரின் கல்வித் திறன் காரணமாக இலங்கையில் சாதாரண நபர் ஒருவருக்கும் இதுவரையில் கொடுபடாத 'பொதுச் சுகாதாரத்தில் ஆசான்' என்கின்ற தராதரத்தையும் பெற்றுக்கொண்டார்.

1969-ம் ஆண்டு 'போட் ஸ்தாபனம்' வழங்கிய உபகார நிதி மூலம் கல்வி சுற்றுலாவை மேற்கொண்டபோது இந்தியா, பாகிஸ்தான், நேபாளம் போன்ற நாடுகளில் குடும்பநல சேவை சம்பந்தமாக ஆய்ந்தறியும் பேற்றைப் பெற்ருர்.

கல்வித்திறனில் மேம்பட்டிருந்தபோதும் தற்பெருமைகாட்டாது பொதுமக்களுடனும்ஏனையஇலாகா ஊழியர்களுடனும் எளிமையாகவே நடந்து கொள்வார், அவரை இலாகா மேலதிகாரிகள் தொடக்கம் யாவரும் 'பாலா' என அன்போடு அழைப்பர்: இலாகா நேராநேரம் இட்ட கட்டளையை சிரமேற் கொண்டு பொதுமக்களுக்கும் இலாகா ஊழியர்களுக்கும் குறிப்பிட்ட விடயத்தை இலகுவில் விளங்கச்செய்து அதன் காரணமாக நடைமுறையில் தூண்டச் செய்வதில் அவருக்கு நிகர் அவரேதான்.

உத்தியோக சம்பந்தமாக நேரத்தைப் பொருட்படுத்தாது தான் எடுத்த வேலையைப் பூர்த்தியாக்குவதி...

துயரில் ஆழ்த்திவிட்டு இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறைவனடி சேர்ந்த அவர் ஆன்மா சாந்தியடைய அன்னரது அந்தியேஷ்டி தினமான இன்று பிரார்த்திப்போமாக.

கா. வயித்தீஸ்வரன்
(சுகாதாரபோதனசிரியர்)
யாழ்ப்பாணம்.

## கி. ச. தேர்தல்கள்

பச்சிலைப்பள்ளி, புதன்

எட்டு வட்டாரங்களைக் கொண்ட முகமாலைக் கிராம சபைத் தேர்தலில் நான்கு வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஏனைய நான்கு வட்டாரங்களுக்கும் இம்மாதம் 20ந் திகதி வெள்ளிக்கிழமை தேர்தல் நடைபெறவிருக்கிறது.

0 0 0

பச்சிலைப்பள்ளி, புதன்

எட்டு வட்டாரங்களைக் கொண்ட முள்ளிப்பற்றுக் கிராமசபைத் தேர்தல், எட்டாம் வட்டாரம் தவிர்ந்த ஏனைய ஏழு வட்டாரங்களுக்கும் இம்மாதம் 27ந் திகதி தேர்தல் நடைபெறவிருக்கிறது. ஏழு வட்டாரங்களிலும் 21 பேர் போட்டியிடுகின்றனர். முன்னள் எட்டாம் வட்டார உறுப்பினர் திரு. சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை இம்முறையும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

சரவணை-சோழாவத்தை

## சு. கட்சிக்கிளை

ஊர்காவற்றுறை, புதன்

சரவணை - சோழாவத்தை சுதந்திரக்கட்சிக்கிளை அமைப்புக் கூட்டம் திரு வி. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின்வருப...

## சுற்றுப் போட்டியில் 6 கழகங்கள்

முசலி, புதன்

மன்னர்க் காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சபையினுல் புனித சவேரியர் மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் சுற்றுப்போட்டியில் பள்ளிமுனை புனித லூசியா கழகம், மன்னர்ப் பட்டின சனசமூகநிலையக் கழகம் திரு இருதய விளையாட்டுக்கழகம் பனங்கட்டுகொட்டு புனித சூசையப்பர் கழகம் நீலடைமன்ஸ் விளையாட்டுக்கழகம் ஆவேமரியா விளையாட்டுக் கழகம் ஆகிய ஆறு விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன.

லொறி விபத்தில்

## மயிரிழையில் உயிர் தப்பினர்

காரைநகர், புதன்

லொறி விபத்தில் கிராம சேவையாளர் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பினர் அவரது சைக்கிள் லொறிச் சக்கரத்திற்குள் அகப்பட்டுக் கடும் சேதத்திற்குள்ளானது இச்சம்பவம் ஊர்காவற்றுறைச் சந்தியில் நேற்று நடந்தது.

அளவெட்டியைச் சேர்ந்த இந்த லொறி, சந்தியிலுள்ள விபத்துத் தடை மேடையில் மோதியதாகவும், சைக்கிளில் சென்ற கரம்பன் கிராமசேவையாளர் திரு. சுந்தரலிங்கம் விபத்தில் மயிரிழையில் தப்பியதாகவும் தெரிகிறது. விபத்துக்குள்ளான லொறியும் பலத்த சேதத்திற்குள்ளானது ஊர்காவற்றுறைப் பொலிஸார் புலன்விசாரணை நடத்திவருகின்றனர்.

## இடமாற்றம்

சுழிபுரம், புதன்

தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய திரு. என் ரி. மூர்த்தி தைமாதம்தொடக்கம் மாத்தளைப் பகுதியிலுள்ள கம்மடுவ மத்திய மருந்துச்சாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

## நிர்வாகசபைக் கூட்டம்

வேலணை, புதன்

வேலணை கலைமகள் இளைஞர் விவசாயக்கழகநிர்வாக சபைக் கூட்டம் அதன் தலை...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ — மனோரமா நடித்த
**செல்லப்பெண்**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர் — லட்சுமி ஜெயலலிதா — அசோகன் நடித்த
**மாட்டுக்கார வேலன்**

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
இன்று மட்டும் ஜெமினி-சரோஜாதேவி நடித்த
**ஐந்து லட்சம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
பே யா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 ம வி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த
**உயர்ந்த மனிதன்**
கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

ரட்ணம், இணைச் செயலாளர்கள் திரு மு பச்சைமால் மருகன், திரு ச சச்சிதானந்தமூர்த்தி, தனாதிகாரி: சி சத்தியமூர்த்தி. 16 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 19—11—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

*344 மீ. அன்ட் 61 மீ.*

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம்.

*344 மீ. அன்ட் 49 மீ*

பகல் 12-00 சித்திரகானம். 1-00 மாதர்கேட்டவை.

*344 மீ. அன்ட் 61 மீ.*

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கிளாரினெட்.

இரவு 6-15 நாட்டுப்பாடல்கள் 6-30 நாட்டுப்பாடல்கள், 7-00 திரைகானம், 7-15 நாடகம், 7-45 மெல்லிசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 சித்திரம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திதொகுப்பு.

கடகம்- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். சிலருக்குப் பதவிஉயர்வு ஏற்படலாம்.

சிம்மம்- இன்னலின்பின்னலால்இதயம் வேதனைப்படும். வீட்டில் வைத்தியச்செலவுகள் அதிகரிக்கலாம்.

கன்னி, துன்பத்தின் ரேகைகள் படரும். தூக்கம் கெடும். எதிர்பார்த்ததில் தடை ஏற்படும். மனதில் ஆத்திரம் அலைமோதும்.

துலாம்- கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். ஆசிரியருக்குப் புகழ் குவியும். நல்லநாள்.

விருட்சிகம்- புத்திரவழியால் புகழும் உண்டு. புதிய பாதையில் நடைபோடுவீர்கள். பொதுவாக நல்ல தினம்.

தனுசு- எதிர்பார்த்த முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை உருவாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றமுடியாமல் வேதனைப்படுவீர்கள்.

மகரம்- வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும். காதல் வட்டாரங்களில் கைகலப்பு தென்படும். வெற்றித் தினம்.

கும்பம்- நிழலுடன் போராட்டம் நடத்துவீர்கள். உங்கள் செல்வாக்கைக் குறைப்பதற்கு எதிரிகள் முனைவர். நிதானம்வேண்டும்.

மீனம்- பொதுத்துறைகளில் உங்கள் செல்வாக்குப் பிரகாசிக்கும். பொதுமக்களின் ஆதரவு வளர்வதற்கு இடமுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம், [illegible]முன் வண்ணை நாவலர் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம், திரு ரேவதி குப்புசுவாமி தலைமையில் நடைபெற்றது. டிசம்பர் 5-ம் திகதி வருடாந்தப் பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதென தீர்மானிக்கப்பட்டது.

நாவலர் பெருமான் ஞாபகார்த்தமாக நினைவு முத்திரையை வெளியிடுமாறு அரசினரைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

......

## நாடகப்போட்டியும் கலைவிழாவும்

யாழ்ப்பாணம், புதன் சித்தன்கேணி கலைஞர் நேருஜி கலாமன்றம் அடுத்த ஆண்டு ஜனவரியில் அகில இலங்கை ரீதியில் நாடகப் போட்டி நடாத்திப் பரிசில்கள் வழங்கத் தீர்மானித்துள்ளது. சமூகம் சரித்திரம் என இருபகுதிகளாக இப்போட்டி நடைபெற இருக்கின்றது.

போட்டியில் பரிசுபெற்ற நாடகங்களையும் இணைத்துக் கலைவிழா நடத்துவதென்றும், கலைவிழாவைமுத்தமிழ் அடிப்படையில் நடத்துவதென்றும் மூன்றும் நாள் நேருஜி கலாமன்றத்தினரின் 19-வது தயாரிப்பான காசேதான் கடவுள்' என்ற சமூக சீர்திருத்தநாடகத்தை மேடையேற்றுவதென்று மன்றம் தீர்மானித்துள்ளது

ருக்கு நிகர் அவரேதான்.

உத்தியோக சம்பந்தமாக நேரத்தைப் பொருட்படுத்தாது தான் எடுத்த வேலையைப் பூர்த்தியாக்குவதிலேயே காலத்தைச் செலவிடுவார். ஓய்வு நேரத்தை சமய மேம்பாட்டிற்கும் சமூக நலனுக்கும் செலவிட்டார்.

தனது துணைவியையும் பிள்ளைகளையும் உற்றார் உறவினர், பொதுமக்கள் முதலானோரையும் ஆற்றொணாத்

சுதந்திரக்கட்சிக்கிளை அமைப்புக் கூட்டம் திரு வி. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ப. கந்தசாமி காரியதரிசி; திரு. ரி. கோபாலபிள்ளை தனாதிகாரி: திரு. வி. முருகன். 15 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

வேலணை, புதன்
வேலணை கலைமகள் இளைஞர் விவசாயக்கழகநிர்வாக சபைக் கூட்டம் அதன் தலைவர் திரு வி எஸ், கனகரெத்தினம் தலைமையில் நடைபெற்றது. வேலணையில் இம் மாதம் 21-ம் திகதி மரம் நாட்டுவைபவத்தையடுத்து இரவு விவசாயம் சம்பந்தமான படக்காட்சி காண்பிப்பதெனவும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

**20-11-70 நாளை முதல்**

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-30 - மாலை 6-30 இரவு 9-45 மணிக்கு

★ ஜெய்சங்கர் ★ வாணிஸ்ரீ
★ மனோகர் ★ ஆனந்தன் ★ நாகேஷ்
★ விஜயலலிதா ★ சுந்தரராஜன்

மற்றும் பலர் திறம்பட நடித்த
தேவரின்
**நேர்வழி**
டைரக்ஷன்: எம் ஜி. பாலு இசை: பி. எஸ். திவாகர்

**விரைவில் வெளிவருகின்றது**

**'ஈழநாடு' தினக்குறிப்பு**
**1971**

முற்றிலும் புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டு விசேஷமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

60 பக்கங்கள் கொண்ட தகவல்கள்

★ அரசாங்க வங்கி வர்த்தக விடுமுறைகள்
★ போயா விடுமுறைகள்
★ பாடசாலை தவணை விடுமுறைகள்
★ உலக - இலங்கை புவியியல், குடியியல், சரித்திரம் சம்பந்தமான குறிப்புகள்
★ தபால் தந்தி விகிதங்கள்
★ பஸ், புகையிரத, விமான சேவை நேர அட்டவணை
★ கிரகங்களின் அட்டவணை

[ இன்னும் பல குறிப்புகள் ]

விலை: ஒன்று 1 ரூ. 50 சதம்
வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

'ஈழநாடு' (வர்த்தக அச்சகப் பகுதி)
த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பாகிஸ்தான் இயற்கைச் சேதம்

# ஒரு கோடி டாலர் அமெரிக்கா உதவி; விசேஷ சேவைப்படையும் செல்லும்

## 13 தீவுகளை கடல் கொண்டது மாண்டவர் தொகை 5 லட்சமா?

நியூயோர்க், நவம்பர் 18

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இயற்கை அழிவுகளைச் செப்பனிடவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவுமென அமெரிக்க அரசாங்கம் ஒரு கோடி டாலர்களை வழங்கவிருக்கின்றது.

நிவாரண வேலைகளில் ஈடுபடுவதற்கென விசேஷ சேவைப் படையொன்றையும் அமெரிக்க அதிபர் அமைத்திருக்கிறார்

ஏற்கனவே அமெரிக்கா 52 ஆயிரம் டாலர்களை பாகிஸ்தானுக்கு நிவாரண உதவிகளாக வழங்கியிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட சூருவளியாலும், கடல் எழுச்சியாலும் சுமார் 5 லட்சம் பேர் வரை இறந்திருக்க வேண்டுமென்று இப்பொழுது ஊர்ஜிதமற்ற முறையில் கூறப்படுகின்றது. ஆனல் அதிகார பூர்வமான தகவல்களின் படி 51 ஆயிரம் பேர் வரையில் மரணமாகியிருக்க வேண்டுமென்று தெரிகின்றது.

சூருவளியாலும் கடல் எழுச்சியினலும் அழிவுக்குள்ளான பகுதிகளில் நிவாரண வேலைகளில் ஈடுபடவும், உணவுப் பொருட்களையும் மருந்துவகைகளையும் விநியோகிப்பதற்கும் ஹெலிகொப்டர் விமானங்களைக் கொடுத்துதவும்படி பாகிஸ்தான் பிரிட்டனையும், அமெரிக்காவையும் கேட்டிருக்கின்றது. ஹெலிகொப்டர்களால் மாத்திரமே அவசர உதவு வேலைகளில் ஈடுபட

கடற்கரைகளில் இன்னமும் நூற்றுக் கணக்கான பிணங்கள் புதைக்கப்படாமல் கிடக்கின்றனவாம். ஒவ்வொரு கடல் அலையும் குறைந்தது ஒரு பிணத்தையாவது கரைக்குக் கொண்டு வருகின்றதாம்.

கிழக்குப் பாகிஸ்தான் நிவாரணத்துக்கென ஐ. நா. சபை என்ன உதவியை வழங்கலாமென்பது பற்றி பொதுச் செயலாளர் யுதாண்ட் தமது அதிகாரிகளுடன் ஆலோசனைகள் ஆரம்பித்திருக்கிறார்.

வங்கக் கடலில் புயல் வீசிய பகுதிகளில் காணமல்போன இந்தியக் கப்பலைத்தேடும் முயற்சியை இந்திய விமானப்படை கைவிட்டிருக்கின்றது.

### 72 கோடி ரூபா நஷ்டம்

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட இயற்கை அழிவின் காரணமாக சுமார் 72கோடி 75 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கக்கூடுமென்று கணக்கிடப் பட்டுள்ளது. கடல் எழுச்சியினல் சுமார் 13 தீவுகள் அழிந்திருக்க வேண்டும் என்று இப்பொழுது அஞ்சப்படுகின்றது இத்தீவுகளில் மாத்திரம் 51 ஆயிரம் பேர் பலியாகியிருக்

### யாழ். தம்பதிகள்

## லண்டன் மேயருடன் விருந்து

லண்டன், நவ. 18

பிரிட்டனில் தற்சமயம் பயின்றுவரும் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவருக்கு லண்டன் மேயருடன் விருந்துண்ணும் வாய்ப்புக்கிடைத்திருக்கிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. வி. சர்வலோகநாயகம் இங்கிலாந்தில் தொழிற்சங்க இயக்கம் பற்றியும் தொழில் உறவுகள் பற்றியும் பயின்று வருகிறார். லண்டன் மாநகரின் புதிய மேயரான சேர் பீட்டர் ஸ்டட்டுடன் அவரது மாளிகையில் இராப் போசனத்தில் கலந்துகொள்ளுமாறு திரு சர்வலோகநாயகமும் அவரது மனைவியும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவுடன் கொழும்புத் திட்டத்தின் உபகாரநிதி பெற்று திரு. சர்வலோகநாயகம் கடந்த 15 மாதங்களாக பிரிட்டனில் படித்து வருகிறார். டிசம்பர் மாதம்

### இலங்கை பொலிஸ் அதிகாரிகள்

## பிரிட்டனில் விசேஷ பயிற்சி பெறுவர்

லண்டன், நவ. 18

சி. ஐ டி பொலீஸ் பிரிவைச் சேர்ந்த மூன்று சிரேஷ்ட இலங்கைப் பொலிஸ் அதிகாரிகள் குற்றத்தடுப்பில் கையாளப்படும் நவீன விஞ்ஞான உத்திகள் பற்றி பிரிட்டனில் விசேஷ பயிற்சிபெறுவார்கள். கொழும்புத் திட்டத்தின் தொழில்நுட்ப உதவி அமைப்பின்கீழ் இவர்கள் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள்.

இன்ஸ்பெக்டர் ரி கதிர்காமர், இன்ஸ்பெக்டர் பி. டபிள்யூ. சில்வா, இன்ஸ்பெக்டர் பீ. ஏ. பெரேரா ஆகியோரே இந்த பொலிஸ் அதிகாரிகளாவர். இம் மூவரும் டிசம்பர் நடுப்பகுதியில் பிரிட்டனுக்குச் செல்வார்கள்.

டிசம்பர் 28ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் துப்பறியும் பயிற்சிவகுப்புகளில் இவர்கள் பங்குபற்றுவார்கள். இவ் வகுப்புகள் 10 வாரங்கள் வரை நடைபெறும், அத்துடன் 'ஸ்கொட்லண்ட் யாட்' பொலீஸ் இலாகாவிலும் மற்றும் சில பொலீஸ் நிலையங்களிலும் குற்றக்கண்டுபிடிப்பு சம்பந்தமாக கையாளப்படும் நவீனமுறைகள் பற்றியும் இவர்கள் பயில்வார்கள்.

இம் மூன்று பொலீஸ் இன்ஸ்பெ[illegible]ர்களும் பிரிட்டனில் தமது [illegible] பயிற்சியை யோ[illegible] ள்ள பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பெறுவார்கள்.

## இஸ்ரேலில் மனித உரிமைகள்

நியூயோர்க், நவ. 18

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள அரபுப் பிரதேசங்களில் மனித உரிமை மீறப்படுவதாக லிபியா பிரதிநிதி ஈஸா பயீ ஆ ஐ. நா. சபையில் குற்றஞ்சாட்டினர்.

கைதிகள் சித்திரவதை செய்யப்படுவதாகவும், மக்கள் கூட்டம் கூட்டமாக துரத்தப் படுவதாகவும் அவர் கூறினர். இது ஜெனிவா சட்ட உடன்படிக்கையை மிருகத் தனமாக மீறுவதாகும் என்று அவர் கூறினர்

தென்னபிரிக்காவிலும் ரொடீஷியாவிலும் சிறுபான்மை வெள்ளையர் ஆட்சி நடத்தும் அட்டூழியங்களையும் அவர் கண்டித்தார்.

## 'விஞ்ஞானக் கல்விக்கு வசதி செய்துதருக'

முசலி, புதன்

நெடுங்கண்டல், பாப்பாமோட்டை, திருக்கேதீஸ்வரம் ஆகிய பெரிய கிராமங்களை அடுத்து இருக்கும் அடம்பன் மகாவித்திாலயத்தில் விஞ்ஞானக்கல்வி [illegible]ரப் பத்திர [illegible] வகுப்புகளில் கற்பிக்கப்படுவதில்லை. ஆத

## ரொடீஷியாவைக் கண்டிக்கும் புதிய தீர்மானம்

### பாதுகாப்புச்சபையில் நிறைவேறியது

நியுயோர்க் நவ. 18

தென் ரொடீசியா தன்னிச்சையாக சுதந்திரப்பிரகடனம் செய்து கொண்டிருப்பதை கண்டிக்கும் புதிய தீர்மானம் ஒன்று ஐ. நா. பாதுகாப்புச் சபையில் ஒருமனதாக நிறைவேறியது.

ரொடீஷியாவைக் கண்டிப்பதற்காக ஏற்கனவே பாதுகாப்புச் சபையில் ஆசிய ஆபிரிக்க நாடுகளினல் தாக்கல் செய்யப்பட்டுபிரிட்டனல் நிராகரிக்கப்பட்ட தீர்மானத்துக்கு பதிலாக இத்தீர்மானம் 5 ஆபிரிக்க நாடுகளில் தாக்கல் செய்யப்பட்டது.

ரொடீஷியாமீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை அனுசரிக்காத நாடுகளை இத் தீர்மானம் கண்டிக்கின்றது. ரொடீஷியாவை எந்த வகையிலும் அங்கீகரிக்கலாகாதென இத் தீர்மானம் அங்கத்துவநாடுகளைக் கேட்டுக் கொள்கின்றது.

## தொலை பேசி சேவை துண்டிப்பு

அம்பன், புதன்

அடிக்கடி டெலிபோன்கம்பிகள் துண்டிக்கப்படுவதால் குடத்தனை, நாகர்கோவில் உபதபாற் கந்தோர்களுக்கும் அம்பன் ஆஸ்பத்திரிக்கும் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்படுகின்றன. இதனல் பொதுமக்கள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

—

## சொய்ஸாவை கௌரவித்து தபால்தலை

கோட்டை, புதன்

இலங்கையின் சிறந்த பரோபகாரியான திரு. சாள்ஸ் ஹென்றி டீ சொய்ஸாவை கௌரவிக்குமுகமாகத் தபால்தலை ஒன்றை வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## இரணை இலுப்பைக்குளம் கி. ச. தேர்தல் முடிவு

முசலி, புதன்

மேற்குமூலை, இரணை இலுப்பைக்குளம் கிராம சபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:

1ம் வட்டாரம்: திரு. வெள்ளையப்பன் இராசு, 2ம் வட்டாரம்: ஜனப் இப்[illegible]ஹிம் சாகிப் அப்துல் லதிப், [illegible] வட்டாரம்: ஜனப் நாகூரான் அப்துல் ஜபார், 4ம் வட்டாரம்: திரு. ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை (போட்டியின்றித் தெரிவு), 5ம் வட்டாரம்: திரு. சிலம்புநாதபிள்ளை சந்திரசேகரம், 6ம் வட்டாரம்: திரு சரவணமுத்து வைரவநாதன், 7ம் வட்டாரம்: திரு. அந்தோனி சந்தியோகுபறுணந்து.

மன்னர் மாவட்ட உதவித் தேர்தல் உத்தியோகத்தர் திரு. எஸ். கந்தசாமி தேர்தலை நடத்தினர்.

## உயர் கல்விபெற அமெரிக்கா சென்றார்

வேலணை, புதன்

வேலணையைச் சேர்ந்த திரு சி கோபாலபிள்ளை, ஆராய்ச்சிப் படிப்புக்காக அமெரிக்கா சென்றுள்ளார். இதற்கான உபகாரச் சம்பளத்தை அமெரிக்கா வழங்கியுள்ளது. வேலணை மத்திய மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவராவர் இவர்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பி. எஸ்ஸி பட்டம் பெற்ற இவர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினர். 1963ல் அளவைப் பகுதி அத்தியட்சகராகக் கடமையாற்றினர். இலங்கையின் உபகாரச் சம்பளம் பெற்று லண்டன் கேம்பிரிட்ஜில் கல்வி பயின்றார். இப்பொழுது இரண்டு வருட பி. ஏச் டி. படிப்புக்காக அமெரிக்கா சென்றுள்ளார்.

— —

## சுழிபுரத்தில் நாவலர் விழா

சுழிபுரம், புதன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி சைவமாணவ மன்றத்தினரின் நாவலர் விழா இன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அதிபர் சு. சிவசுப்பிரமணியம் விழாவுக்கு தலைமைதாங்குவார். நாவலர் படத்தை நாவலர் திருப்பணிச்சபைச் செயலாளர் திரு. ம. ஸ்ரீகாந்தா திரைநீக்கம் செய்துவைப்பார். செல்வி புஷ்பாசெல்வநாயகமும் பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களும் உரையாற்றுவர் சங்கீதபூஷணம் வி. கே. நடராஜனின் இசைநிகழ்ச்சியும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. ஹெலிகொப்டர்களால் மாத்திரமே அவசர உதவுவேலைகளில் ஈடுபட முடியுமென்று பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் இப்பொழுது ஒரு ஹெலிகொப்டர் மாத்திரமே உதவிப்பணிகளில் ஈடுபட்டிருக்கின்றதாம்.

அமெரிக்காவிலிருந்து பல ஹெலிகொப்டர் விமானங்கள் இப்பொழுது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

அழிவு ஏற்பட்ட பகுதிகளில் கொலரா போன்ற கொள்ளை நோய்கள் ஏற்படாத வகையில் அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுத்திருந்தபோதிலும் ஏற்கனவே பல இடங்களில் கொலரா தோன்றியிருப்பதாக அஞ்சப்படுகின்றது.

முது அஞ்சப்படுகின்றது இத்தீவுகளில் மாத்திரம் 51 ஆயிரம் பேர் பலியாகியிருக்கிறார்கள்.

## பிரிட்டிஷ் உதவிகள்

லண்டன், நவ 18

கிழக்குப் பாகிஸ்தான் சூறுவளி அகதிகளுக்கென பல பிரிட்டிஷ் தர்மநிதி ஸ்தாபனங்கள் உதவிகளை அளித்திருக்கின்றன. பிரிட்டனிலுள்ள சிறுர்பாதுகாப்பு நிதி ஸ்தாபனம் 5000பவுண்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. வயோதிபர் சகாயநிதி சங்கம் உடைகளையும் கம்பளிகளையும் கொடுத்துள்ளதுடன் 1000 பவுண்களையும் உதவியாக அளித்துள்ளது.

# சோவியத் கலம் பூமிக்குத் திரும்பாது

மாஸ்கோ, நவ 18

சோவியத்யூனியன் சந்திரனில் இறக்கிய ஆளில்லாக் கலத்திலிருந்து விடுபட்ட வாகனம் சந்திரத் தரையில் தொடர்ந்து ஆராய்ச்சிகளை நடத்துவதாக அறிவிக்கப்பட்டது.

எட்டு சக்கரங்களைக் கொண்ட இந்த வாகனம் சூரிய இயக்கத்திஞல் செயல்படும்பட்டரிகளைக் கொண்டதாம். இதுவும், இதனைச் சந்திரனுக்கு கொண்டு சென்ற லூனு - 17 கலமும் பூமிக்குத் திரும்பிவரமாட்டாதென்றும் அதற்கான கருவிகள் பொருத்தப்படவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

சோவியத்விஞ்ஞானிகளின் இந்தச் சாதனையை அமெரிக்க விஞ்ஞானிகள் பாராட்டியுள்ளனர்' இம்மாதிரியான சாதனையொன்றை இதற்குமுன் அமெரிக்கா நிகழ்த்தவில்லையென்பதை அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

## கொழும்பில் பாபா ஜெனன தினம்

கோட்டை, புதன்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 45 வது பிறந்த தின விழா இம்மாதம் 23-ம் திகதி கொழும்பு பாபர் வீதியிலுள்ள சாயி இல்லத்தில் கொட்டாஞ்சேனை சத்திய சாயி பாபா சத்சங்கத்தினரால் கொண்டாடப்படவிருக்கிறது.

கட்டாய ஓய்வுக்கு

## ஆட்சேபம் தெரிவித்து மகஜர்

பருத்தித்துறை, புதன்

தற்பொழுது 55 வயதைத் தாண்டிச் சேவை நீடிப்பிலுள்ள சில தபால், தந்திப் பகுதி ஊழியரை விடுத்து, 55 வயதை அடையும் ஊழியருக்கு மட்டும் கட்டாய ஓய்வுக்கட்டளைகளை அரசாங்கம் அனுப்புவதை ஆட்சேபித்து இப்பகுதியிலுள்ள ஊழியர்கள் தமது தொழிற் சங்கத்திற்கும், அமைச்சுக்கும் மகஜர் அனுப்பியுள்ளனர். இது விடயமாக சில தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர் ஆட்சிமன்றத்தில் கேள்வி கேட்க விரும்புவதாகவும் தெரிகிறது.

## பெற்ருர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

பூநகரி, புதன்

பூநகரி மகாவித்தியாலய பெற்ருர் ஆசிரியர் சங்கக் கூட்டம் பாடசாலை அதிபர் திரு. எஸ் சிவகுரு தலைமையில் நடைபெற்றது. தலைவராக திரு. எஸ். சிவகுருவும், உபதலைவராக திரு. ஆ. தம்பையாவும் காரியதரிசியாக திரு. த. இராசேந்திரமும் தனதிகாரியாக திரு. வ. அரியரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

நாயகம் கடந்த 15 மாதங்களாக பிரிட்டனில் படித்து வருகிருர். டிசம்பர் மாதம் வரை பிரிட்டிஷ் சிவில் சேவை இலாகாவில் பயின்று வருவர் பேர்க்ஸயர் நகரிலுள்ள சிவில் சேவையாளர் கல்லூரிகளில் நடைபெறவிருக்கும் இரு கருத்தரங்குகளிலும் அவர் பங்கு பற்றுவார்.

திரு சர்வலோகநாயகம் பிரிட்டனுக்கு விஜயம்செய்திருப்பது இது இரண்டாவது தடவையாகும். 1960-ம் ஆண்டில் பிரிட்டிஷ் தொழில் அமைச்சில் சிறிது காலம் பயிற்சி பெற்ருர். பிரிட்டனில் தாம் தனிப்பட்ட முறையில் இனப் பாகுபாட்டை எதிர்நோக்கவில்லை என்றும் ஆங்கில மக்கள் அன்பும் பண்பும் நிறைந்தவர்கள் என்றும் அவர் கூறினர்.

## இலவச விநியோகம்

பூநகரி. புதன்

கரியாலை, நாகபடுவான், முழங்காவில் குடியேற்ற வாசிகளுக்கு இம்மாதம் முதல் கோதுமை மா, சீனி, பால்மா, வெண்ணை, ரின் மீன் ஆகிய உணவுப் பொருட்கள் குடும்ப உறுப்பினர் தொகையைப் பொறுத்து வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் குடியேற்ற மேட்டுக் காணிகளில் நடுவதற்காக மா, பலா, சீமை இலுப்பை, மாதுளை, தென்னை ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன. புதிதாக காணி விதைப்பவர்களுக்கு தலா ஆறு புசல் விதை நெல்லும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

## தமிழ்தெரிந்த பொலிஸாரை நியமிக்குக

வேலணை, புதன்

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலிசாரை நியமிக்கும்படி பிரதமரையும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலையும் திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. கடிதமூலம் கேட்டுள்ளார்.

இவ்விரு பொலிஸ் நிலையங்களிலும் உள்ள பொலிசாருக்குத் தமிழ்தெரியாதாகையால் இப்பகுதி மக்கள் கஷ்டமுறுகின்றனர். மக்கள் தமிழில் கூறினல் பொலிஸாருக்கு அதுவிளங்குவதில்லை, என அக்கடிதத்தில் திரு. இரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

சியை யோக்ஸயர் நகரிலுள்ள பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பெறுவார்கள். கொலை, கொள்ளை போன்ற குற்றங்க[illegible] சம்பந்தமாக பிரிட்டன[illegible] மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பற்றி இன்ஸ்பெக்டர் கதிர்காமரும், இன்ஸ்பெக்டர் சில்வாவும் விசேஷமாகப் பயில்வார்கள் கடத்தல், ஆபாச இலக்கியம், வெடிகுண்டு உற்பத்தித் தடுப்பு போன்றன சம்பந்தமாக இன்ஸ்பெக்டர் பெரேரா விசேஷ பயிற்சி பெறுவார்.

## கி. வா. ஜ. சொற்பொழிவு

கோட்டை, புதன்

வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் இம்மாதம் 20-ம் திகதி கலைமகள் ஆசிரியர் வித்துவான் கி. வா. ஜகந்நாதன் இலக்கிய இன்பம் என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்துவார். கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு கு. பாலசிங்கம் இக் கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

## பாடசாலை பற்றி எம். பி. பாராட்டு

புத்தூர், புதன்

"ஆசிரியர்கள் கடமையுணர்ச்சியுடன் உழைப்பதன் காரணமாக அச்சுவேலி ஸ்ரேஷன் அ. மி. பாடசாலையின் தரம் உயர்ந்துள்ளது. ஆண்டுத் தொடக்கத்தில் பெற்ருர் தம்பிள்ளைகளை இப் பாடசாலையில் சேர்ப்பதற்குக்காட்டும் ஆர்வம் இதன் தரத்திற்கு எடுத்துக்காட்டாகும்" என பிரஸ்தாப பாடசாலைப் பெற்ருர் தின விழாவில் உரையாற்றிய கோப்பாய் எம். பி திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை கூறினர். பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே. சண்முகநாதன் தலைமை வகித்தார்.

பெற்ருர் ஆசிரியர் சங்கக் காரியதரிசி பேசுகையில், பாடசாலை அதிபர் திரு. எஸ். வி. வேலுப்பிள்ளையின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர். கோப்பாய்த் தொகுதியில் மட்டுமன்றி வடபகுதியிலேயே இப் பாடசாலை கல்வி வளர்ச்சியில் முன்னணி வகிப்பதாயும் அதிபரின் அயராத உழைப்பே இதற்குக்காரணமென்றும் அவர் சொன்ஞர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

சாதாரண வகுப்புகளில் கற்பிக்கப்படுவதில்லை. ஆதலால் இந்த மகாவித்தியாலயத்தில் கல்விபெறும் மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள்

இக் குறையைப் போக்க இந்த மகாவித்தியாலயத்தில் கல்விப்பொதுத்தராதரப்பத்திர சாதாரண வகுப்புக்கு விஞ்ஞானம் போதிக்கவேண்டுமென்று இப் பகுதி பெற்றேர் விரும்புகிருர்கள். இதற்கான ஆயத்தங்களை செய்யும்வண்ணம் மன்னர் மாவட்ட கல்வி அதிகாரி திரு. ஆர். திருநாவுக்கரசுவிடம் கேட்டுள்ளார்கள்,

......

## வலைகளுக்கும் கட்டுமரத்துக்கும் தீ வைத்தனராம்

அம்பன், புதன்

ஆழிபுரத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் சித்தர் என்பவருக்குச் சொந்தமான வலைகளையும். கட்டுமரத்தையும் கடற்கரையில்வைத்து பெற்ரேல் ஊற்றிக் கொழுத்திப் பெரும் சேதம் விளைவித்ததாக பருத்தித்துறைப் பொலிசில் சித்தர் செய்த முறைப்பாட்டின்பேரில் ஆழிபுரத்திலுள்ள காரொன்றையும் ஒரு கோஷ்டியையும் பருத்தித்துறைப் பொலிசார் கைதுசெய்து பிணையில் செல்ல அனுமதித்துள்ளனர்

......

காசநோயாளர்

## சைவசபை நிறுவ தீர்மானம்

அம்பன், புதன்

மயிலிட்டி காசநோயாளர் வைத்தியசாலையில் உள்ள இந்துமதத்தைச் சேர்ந்த நோயாளிகள் தமக்கொரு சைவசபையை நிறுவத்தீர்மானித்துள்ளார்கள்.

இது நிறுவுவது சம்பந்தமாக அவர்கள் வடபகுதியிலுள்ள சகல வைத்தியசாலைகளுக்கும் வேண்டுகோள் ஒன்றை அனிப்பிவைத்துள்ளார்கள்.

அவ்வேண்டுகோளில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது: நாம் இங்குள்ள முருகன் ஆலயத்தில் தினமும் வழிபாடு செய்கிறேம். எமக்கு ஒரு சைவசபையை நிறுவி இம்மாதம் 27-ம் திகதி நடக்கவிருக்கும் இவ்வாலயத்தின் 18 வது ஆண்டு விழாவை விசேஷ நிகழ்ச்சிகளோடு கொண்டாடவுள்ளோம் அதற்கு உங்களை உதவிசெய்யுமாறு வேண்டுகிறேம்.

இந்தவேண்டுகோளை மயிலிட்டி இந்துமத நேயாளர் சபைச்செயலாளர் விடுத்துள்ளார்,

4ம் வட்டாரம்! திரு. ஐயம்

கத்தர் திரு. எஸ். கந்தசாமி தேர்தலை நடத்தினர்.

# ஒரே கிணறு; அதிலும் இராணுவ ஆக்கிரமிப்பு

## தண்ணீர்பெறுவதில்பெண்கள் கஷ்டம்

முசலி, புதன்

மறுச்சுக்கட்டிக் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த முள்ளிக்குளம் என்னும் கிராமத்தில் ஒரேயொரு கிணறுதான் குடிதண்ணீருக்காகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. இக் கிணற்றில் சமீபத்தில் இக் கிராமத்தில் தங்கியிருக்கும் இளம் இராணுவ வீரர்கள் மணித்தியாலக்கணக்காக நின்று தண்ணீர் அள்ளியும், குளித்தும், முழுகியும் வருவதால் இங்குள்ள மக்கள் தங்கள் குடிதண்ணீரைக் கூட அள்ள முடியாத நிலைமை ஏற்படுகிறது.

இந்தக்கிணற்றுப்பக்கத்தில் ஒரு குளம் நிரப்பி வழிந்தோட இந்த இளம் இராணுவ வீரர்கள் இந்தக் குடிதண்ணீர் அள்ளும் கிணற்றை நாடுவது இப்பகுதி மக்களுக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ளது.

இந்த இராணுவ வீரர்கள் தண்ணீருக்கு வரும் இளம் பெண்களைப்பார்த்து சிரிப்பும், கேலிக்கூத்தும், நையாண்டியும் செய்கின்றனரென்றும், இவர்கள் நாள் கணக்காக இந்தக் குடிதண்ணீர் அள்ளுகின்ற கிணற்றில் நின்று ஸ்நானம் செய்வதால் தண்ணீருக்கு போகும் இளம் பெண்கள் இந்தக் கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கு போவதற்கு பயப்படுவதாகவும், இதையிட்டு முள்ளிக்குளம் கிராம முன்னேற்றச் சங்கமும், முள்ளிக்குளம் கடற் தொழிலாளர் கடனுதவி கூட்டுறவு உற்பத்தி விற்பனவுச் சங்கமும் மேலதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளன.

## பொலிஸ் அதிபர்கள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அதிபர் திரு. ராஜகுரு கம்பளைக்கும், காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் திரு. ஜோக்கிம், நுவரேலியாவிற்கும் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்கள் மன்ஞர் உதவிப் பொலிஸ் அதிபரும் இடமாற்றம்பெறுகிருர்.

முதியோர்கல்விபற்றி

## பயிற்சி வகுப்புகள்

கோட்டை, புதன்

கல்வியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி டாக்டர் பி. உடுகம தலைமையிலானமுதியோர் கல்விக்குழு அடுத்த ஆண்டு ஜனவரியில் இருந்து முதியோர் கல்வி பற்றி பயிற்சி வகுப்புகள் நடாத்தத் தீர்மானித்துள்ளது;

இப் பயிற்சி வகுப்புகள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கின்றன. லண்டன் பல்கலைக்கழக முதியோர் கல்வி முறையை அனுசரித்தே இவ் வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

## சந்தைப்படுத்தும் தொழில் விஸ்தரிப்பு

கோட்டை, புதன்

நாரஹேன்பிட்டியாவிலுள்ள சந்தைப்படுத்தும் திணைக்கள வேலை விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

தகரங்களில் பொருட்களை பாதுகாப்பாக அடைக்கும் தொழிலை மேலுப் நவீனமயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. தற்போது போதிய யந்திரசாதனங்கள் இல்லாததனுலேயே இத் தொழிலை மேலும் விஸ்தரிக்க இயலாமல் இருந்தது. அரசாங்கம் யந்திரசாதனங்களை இறக்குமதிசெய்ய விருக்கிறது.

......

## வீடு தீக்கிரை

வேலணை, புதன்

வேலணை கிழக்கைச் சேர்ந்த அந்தோனி என்பவரின் வீடு தீக்கிரையாகியது, நள்ளிரவில் நடைபெற்ற தீ விபத்தின்போது பொருள்களும், உடைகளும், கூப்பன்களும் தீக்கிரையாகின எனக்கூறப்படுகிறது உயிர்ச்சேதமெதுவும் இல்லை, தீ பரவத்தொடங்கியதும் வீட்டிலுள்ளோர் கூச்சலிட்டதையடுத்து அங்குவிரைந்த அரலவர்களினுல் தீதொடர்ந்து பரவாது அணைக்கப்பட்டது.

ராஜனின் இசைநிகழ்ச்சியும் நடைபெறும்.

......

## புராணப் படிப்பு

சுழிபுரம், புதன்

வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் காசி காண்டப் புராணப் படிப்பு கார்த்திகை முதல் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது, தினமும் பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் மாலை ஆறுமணிவரையும் நடைபெற்றுவரும் இப் படிப்பு வைபவத்தில் பலர் கலந்துகொள்கின்றனர். கார்த்திகை மாதம் பூராவும்நடைபெறும் இப்படிப்பு வைபவத்தில் உரையாசிரியர் யோகி கார்த்திகேசு பயன் சொல்லும் பொறுப்பையேற்றுள்ளார்,

......

## "பாடசாலை பஸ் சேவை நடத்துக"

சுன்ஞகம், புதன்

ஏழாலை பஸ் பிரயாணிகள் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் புன்னலைக்கட்டுவனில் இருந்து ஏழாலையூடாக ஒரு பாடசாலை பஸ் சேவையை தினமும் காலை 8 மணிக்கும் மாலை 4-30 மணிக்கும் ஆரம்பிக்கும் படி இ. போ. சபையைக்கேட்டுக்கொள்வதென்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது இதன் பிரதிகள் போக்குவரத்துத் தலைவருக்கும் பிரதேசஅத்தியட்சகருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

......

## நம்பி ஏமாந்த விவசாயிகள்

புதுக்குடியிருப்பு, புதன்

ப. நோ. கூ. சங்கம் வழங்கும் விவசாயக் கடனை நம்பி வயல்களை விதைத்த புதுக்குடியிருப்பு விவசாயிகள் பெரிதும் ஏமாற்றத்திற்குள்ளாகியுள்ளனர். கடந்த வருடங்களில் வழங்கப்பட்ட கடன் தொகையிலும் மூன்றிலொரு பகுதி கடனே இம் முறை வழங்கப்பட்டதால் உழவு சம்பந்தமாக ஏற்பட்ட கடனைத் தீர்க்க முடியாமல் இவர்கள் கஷ்டமடைந்துள்ளனர்.

......

## டிப்ளோமா பரீட்சை

கோட்டை, புதன்

ஜனவரி 15-ந் திகதி நடைபெறவிருக்கும் டிப்ளோமா பரீட்சைக்கு 6பல்கலைக்கழகங்களிலிருந்தும் மொத்தம் 700 பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கின்றனர். பரீட்சை சிங்களத்திலும், தமிழிலும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தேசிய வழிகளில் வளர்ச்சியும் அதை விஸ்தரிப்பதற்குரிய முயற்சியையும் அதை அபிவிருத்தி செய்யும் எண்ணத்தையும் இலட்சியமாகக்கொண்டவனே உண்மையான தேசபக்தன்.

— விவேகானந்தர்.


# ஈழநாடு

"Eelanadu ... Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49; Jaffna: Telephone: 889;

[illegible] சாதாரண [illegible] கார்த்திகை மாதம்
4-ம் திகதி (19-11-70)


## மாவட்ட நிர்வாகம்

மக்களின் அபிலாசைகளுக்கேற்ப மாவட்டநிர்வாக முறை மாற்றியமைக்கப்படவிருக்கிறதென்றும் இதற்கான நடவடிக்கைகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதமர் திருமதி ஸ்ரீமாபண்டாரநாயக கொழும்பில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் தெரிவித்து அரசாங்கத்தின் கொள்கைகளோ இன்றைய ஆட்சியின் கொள்கைகளோ பிடிக்காமலிருந்தாலும் அரசாங்க ஊழியர் என்ற முறையில் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் செய்யவேண்டிய கடமையைச் செய்யவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டிருக்கிறார். மாவட்டநிர்வாக அமைப்பில் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் உருவாக்கப்படவிருக்கிறதென்பதையும் பிரதமர் தமது பேச்சில் தெரிவித்திருக்கிறார்.

இப்போதுள்ள கச்சேரி முறை அந்நியரின் ஆட்சிக்காலத்தில் அவர்களின் நலன் கருதிக் கொண்டுவரப்பட்டதென்பதும் இந்தக் கச்சேரி முறையை மாற்றவேண்டுமென்பதிலும் அபிப்பிராயபேதம் இல்லை. கச்சேரி முறை மாற்றப்படுமென்றும் புதிய முறையில் மாவட்ட நிர்வாகம் ஏற்படுத்தப்படுமென்றும் ஆட்சிக்கு வருவோர் அடிக்கடி கூறிவந்திருக்கின்றனர் இந்த மாற்றத்தைச்செய்வதற்கு காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகாவும் முன்னைய பிரதமர் திரு. டட்லிசேனநாயகா அரசாங்கமும் முனைந்தது உண்மைதான். ஆனாலும் மாவட்டநிர்வாகம் எப்படி மாற்றமடையுமென்பதைப் பற்றிய சரியான திட்டமெதுவுமில்லாததும் கட்சி அரசியல் காரணமாக அரசியல் ஆதா

தேவைகளை நிறைவேற்றக்கூடிய - மக்களின் விருப்பத்துக்கேற்ற மாவட்ட நிர்வாக முறையை ஏற்படுத்துவதோ இன்றைய அரசாங்கத்துக்குக் கஷ்டமல்ல.

கச்சேரி முறை ஒழிக்கப்பட்டு மாவட்ட நிர்வாகமுறை எப்படியிருக்குமென்பதைப் பற்றி அரசாங்கம் இதுவரை எதையும் தெளிவாகத் தெரிவிக்கவில்லை ஆனாலும் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் நடைபெற்ற மாவட்ட அரசாங்க அதிபர்களின் மகாநாட்டில் பேசிய பிரதமர் புதிய அமைப்பிலும் மாவட்ட அரசாங்க அதிபர்களின் பொறுப்பு அதிகமென்பதைச் சுட்டிக்காட்டியதுடன் மாவட்ட அபிவிருத்திச்சபைகள், மக்கள்குழுக்கள் அமைக்கப்படவிருக்கிறதென்ற தகவலையும் தெரிவித்திருக்கிறார்.

அதிகாரங்கள் யாவும் ஒரே இடத்தில் தலைநகரில் குவிந்திருக்கின்றன. ஒரு கிராமத்தில் அதன் வளர்ச்சிக்காக எதைச் செய்வதானாலும் அரசாங்கத்தின் அனுமதியும் உதவியும் வேண்டும். இது கிடைப்பதென்பது சுலபமான விஷயமல்ல. இதனால் நிர்வாக ஊழலும் ஏற்பட ஏதுவாகிறது.

அந்தந்தப் பகுதியின் அபிவிருத்திக்கு அந்தந்தப் பகுதி மக்களே பொறுப்பேற்றுக்கொள்ளக் கூடிய முறையில் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டால் கிராமங்கள், மாவட்டங்கள் அபிவிருத்தியடைந்து நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றமடையும்.

அரசாங்க அதிபர்கள் மக்களுடன் கலந்து பழகி அவர்களின் குறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தையும்

# பாப்பரசரின் இலங்கை விஜயம்

பாப்பரசரின் இலங்கை விஜயம் சரித்திரப் பிரசித்தமானது. சில மணி நேரமே இங்கு தங்குவாராயினும் நாட்டின் எல்லாப் பகுதி மக்களும் அவரைத் தரிசிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

உலகில் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு சில மனிதர்களில் பாப்பரசரும் ஒருவர்.

கோடிக்கணக்கான கத்தோலிக்கர்கள் அவரைக் கடவுளின் பிரதிநிதியாகப் போற்றிவருகின்றனர்.

பொதுவாகப் பாப்பரசர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றது கிடையாது. வத்திக்கானை விட்டு வெளியே செல்லும் பழக்கத்தைக் காலஞ்சென்ற பாப்பாண்டவர் ஜோன் ஆரம்பித்து வைத்தார் இன்றைய பாப்பரசர் போல் அதை மேலும் விஸ்தரித்துவருகிறார்.

ஜெரூஸலத்துக்கும், லத்தீன் அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும், மற்றும் சில நாடுகளுக்கும் பாப்பரசர் போல் சமீப வருடங்களில் சென்றுவந்தார்.

அவர் ஓர் உலகத் தலைவராக விளங்குவதால் பாப்பரசர் எந்த நாட்டுக்கு விஜயஞ்செய்தபோதிலும் அது ஒரு சர்வதேச நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.

சர்வதேச நெருக்கடிகளின் போது காலஞ்சென்ற பாப்பரசர் ஜோன் வகித்த பாகம் வெகுவாகப் புகழப்பட்டது. மத அடிப்படையில், லூதருக்குப் பின் பிரிந்து சென்ற புரடஸ்தாந்துக்களையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில் அவர் தீவிரமாக உழைத்தவர். இதற்காக கிறிஸ்தவ திருச்சபைகளின் மகாநாட்டை வத்திக்கானில் கூட்டினார்.

அர்ச். பீட்டர், முதலாவது பாப்பரசர் ஆவார். இயேசுநாதரின் பன்னிரண்டு சீடர்களில் அவர் முதன்மையானவர். அதன் பின் நூற்றுக்கணக்கான பாப்பரசர்கள் பதவிக்கு வந்திருக்கிறார்கள்.

இடைக்காலத்தில் கிறிஸ்தவ திருச்சபையில் பிளவு ஏற்பட்டது, எனினும் கத்தோலிகப் பிரிவினரே கிறிஸ்தவ மதத்தில் மிகப் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ திருச்சபைகள் ஆற்றிவருகின்றன. எனினும் ஏகாதிபத்திய விஸ்தரிப்புக்கும் கிறிஸ்தவ குருமார்கள் உபயோகிக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கையில் போர்த்துக்கேய, டச்சு, பிரிட்டிஷ் ஆட்சியினர் மத குருமார்களைப் பல வகைகளில் உபயோகித்துக்கொண்டனர் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

பாப்பரசர்கள் ஒருகாலத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தார்கள். மன்னர்களைச் சிம்மாசனத்தில் அமர்த்தவும், சிம்மாசனத்தில் இருந்து வீழ்த்தவும் அவர்களுக்கிருந்த சக்தியை ஐரோப்பிய சரித்திரத்தில் காணலாம். ஆனால் இன்று பாப்பரசர்களுக்கு அத்தகைய வலிமை இல்லை.

கத்தோலிக்க மதத்தின் ஏகத் தலைவரான பாப்பரசர்களுக்குப் பல சோதனைகள் ஏற்பட்டதுண்டு சமீப காலத்தில் மிகப் பெரும் சோதனைகளுக்கு உள்ளாகியவர் பாப்பரசர் போல் ஆவார்.

விவாகரத்து, கருத்தடை போன்ற விஷயங்களில் கத்தோலிக்க திருச்சபையில் பல மோதல்கள் ஏற்பட்டதை அறிவோம். பாப்பரசர் போல் ராஜினாமாச் செய்துவிடுவார் என்றுகூடப் பலர் எதிர்பார்த்தார்கள். எனினும் இன்றைய பாப்பரசர் இந்த விஷயகளில் வைதீகக் கொள்கையைக் கைவிடத் தயாராய் இல்லை.

இன்னும் சில தினங்களில் பாப்பரசரை இலங்கை மக்கள் தரிசிக்கப்போகிறார்கள். பாப்பரசர் ஒருவர் இலங்கை வருவது இதுவே முதல் தடவையாதலால் இந்த விஜயம் சரித்திரத்தில் இடம் பெறும். லட்சோபலட்சம மக்கள் அவரது விஜயத்தை ஒரு திருவிழாவாகப் பார்க்கவிருக்கிறார்கள். கத்தோலிக்கர்கள் மட்டுமின்றி எல்லா மக்களும் தரிசிக்கக்கூடிய மேன்மையான பணியில் பாப்பரசர் ஈடுபட்டிருக்கின்றார்.

எனவே அவரது விஜயம் பெரும் வெற்றியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

( மணியம் )

# மறைந்த மாணிக்கம்

'அரியக்குடி போய்விட்டார், மஹாராஜபுரமும் போய்விட்டார், கூடவே மதுரை மணியும் ஜி. என். பி. யும் சௌடையாவும் கூடப் போய் விட்டார்கள். இனிமேல் நமக்கென்ன வேலை இங்கே' என்று நினைத்தவர் போல வயலின் வித்வான் கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையும் தமது மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக் கொண்டு, நம்மெல்லோரையும் துயர சாகரத்தில் ஆழ்த்திவிட்டு, போய்ச் சேர்ந்து விட்டார். கடந்த ஐம்பது அறுபது வருடங்களாக தென்னிந்திய இசை வானத்தில் சுடரொளி விட்டு பிரகாசித்துக்கொண்டிருந்த தாரகைகள் ஒவ்வொன்றாக மறைந்து கொண்டிருக்கின்றன புதிய புதிய தாரகைகள் தோன்றி மின்னிக் கொண்டிருப்பது உண்மைதான் என்றாலும் நெஞ்சில் ஒரு தவிப்பு; பழைய காலத்து நினைவுகள் வந்து குளிர்ந்து ஓர் அமுக்கம்.

வித்வான் ராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் உண்மையிலேயே ஒருபெரியமனுஷர் உருவத்தில் பெரியவர். ஞானத்தில் பெரியவர், உள்ளத்தில் மகா பெரியவர், அவர் மேடையில்வந்து உட்கார்ந்ததும் சபைக்கு ஓர் அலங்காரப் பொலிவு ஏற்படும். ஆறடி உயரமான

ரோடு சுமுகமாகப் பழகுவார். இக்காரணத்தினால் தான் அவருக்கு சங்கீத உலகில் பகையோ பொறாமையோ இருந்ததில்லை. கோனேரி ராஜபுரம் வைத்தியநாதையர், பூச்சி ஸ்ரீனிவாஸய்யங்கார் முதலிய பெரிய பர்வதங்கள்தொடக்கம் முன்னுக்கு வரமுயலும் சிறிய வித்வான்கள் வரை யாருக்கு பக்க வாத்தியம் வாசித்தாலும் அசிரத்தையோ அகம்பாவமோ இல்லாமல் இன்முகத்தோடும்மிகுந்த ஈடுபாட்டோடும் வாசிப்பார்.

மிகவும் சிறிய வயதிலேயே வயலின் கச்சேரி செய்ய ஆரம்பித்து விட்ட பிள்ளையவர்கள் கோவித்வாள் திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யரின் சிஷ்ய பரம்பரையில் வந்தவர், இவருடைய சிஷ்யரான ராமஸ்வாமி ஐயரிடம் குருகுலவாசம் செய்தபின்பு, திருவிசை நல்லூர் நாராயணசாமி ஐயர், வேணு கானம் நாகராஜராவ், உமையாள்புரம் சுவாமிநாதையர் ஆகியோரிடமும் சிட்சை பெற்றார் அதற்குப் பின் அவர் திரும்பிப் பார்க்கவேயில்லை. ஐம்பதைந்து ஆண்டுகள் இசைத்தொண்டு செய்துவிட்டு தமது 73-வது வயதில் நாதப்பிரம்மத்தில் கலந்து கொண்டார்

பக்க வாத்தியம் வாசிப் பாடுபவருக்கு உபத்திரவம் கொடாமல் முக்கிய ஸ்வரஸ்தானங்களைமட்டும் அழுத்திக்காட்டி நாதம் எழுப்பிக் கொண்டிருப்பார். பாடகர் ஓய்ந்ததும் அவர் பாடியதன் சாரத்தை அப்படியே பொழிப்பாக எடுத்துக் காட்டி அழகு செய்வார்.

ஸோலோ வயலின்கச்சேரி செய்யும்போது ராகத்தின் ஒவ்வொரு சஞ்சாரத்தையும் இரண்டு தடவை அடுத்தடுத்து வாசிப்பது பிள்ளையவர்களின் வழக்கம். இது, 'இந்த சங்கதியின் அழகை இன்னுமொரு முறை கேட்டுப் பாருங்கள்' என்று கூறுவது போலிருக்கும்.

ராஜமாணிக்கம் பிள்ளையின் பெருந் தன்மைக்கு எடுத்துக்காட்டாக செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர் ஒரு கதை சொல்வதுண்டு. செம்மங்குடியின் கச்சேரி ஒன்று கும்பகோணத்தில் மாலை 5மணிக்கு ஏற்பாடாயிருந்தது. ஆறுமணியாகியும் வயலின் வாசிக்க வேண்டிய சௌடையா வந்து சேரவில்லை. செம்மங்குடியார் அருகில் நின்ற பிள்ளையவர்களை நோக்கினார்; குறிப்பை அறிந்துகொண்டு பிள்ளையவர்கள் தமது வயலினை வரவழைத்து தாமே பக்க வாத்தியம் வாசித்தார். கச்சேரிகளை கட்டி நடந்து கொண்டிருந்தது, மணி ஏழரையாகிற்று. திடீ

# கண்டத்திலிருந்து மட்டும் இசை பிறப்பதில்லை! கைகளிலும் அதுவிளையாடும்

— இ. நாகராஜன் —

**மலையருவி ஒரு கணப்பொழுது கட்டுற்று நின்று, மறுகணம் பொங்கிப்பிரவகித்து, அடுத்தகணம் மெதுவாக வழிந்து, அதற்கப்புறம் கம்பீர்யத்துடன் பாய்ந்து செல்லுமானால் அதுவியப்புக்குரிய செயல்தானே மலையருவி இப்படிச்செய்யவில்லை. இசையருவியின் விந்தையை நேற்றுமுன்தினம் கண்டேன்; இல்லை! கேட்டேன்.**

பாரதத்தில் தன்இசைத் திறனால் புகழுற்ற சங்கீத மேதை கலாநிதி முசிரி சுப்பிரமணியஐயரின் பிரதம சிஷ்யன் ரி, கே. கோவிந்தராவ் அவர்களின் கச்சேரியைக்கேட்கும் பாக்கியம் பெற்றவர்கள் நான் குறிப்பிடும் உண்மையைபுரிந்துகொள்ளாமலிருக்கமுடியாது ஏறத்தாழமூன்றுமணிநேரம் கச்சேரி நிகழ்ந்தது.

மேடையில் கம்பீரமான தோற்றத்துடன், இதழில் புன்னகைபொங்க இருந்த வித்துவானின் மேல் கண்ணோட்டம்விட்டபடிகூட்டத்தில் ஒருவனாக இருந்தேன்.

மேடையின்முன் யாழ்ப்பாணத்தின் மிகப்பிரபல சங்கீதவித்துவான்கள் பலர் தம்மை மறந்து கட்டுண்டிருந்தனர்.

முததுக்கள் சிந்துவது போல் பிறந்தஇசைச் சாகித்தியங்களை வித்துவான் கையிற்பிடித்து விளையாடுகின்றாரா? என்று எண்ணும்படி பாடலின் ஏற்றஇறக்கத்துக்கு அமைய கைகள், உயர்ந்தும் தாழ்ந்தும் நடுநிலையடைந்தும் கேட்பார்களின் கண்களின்முன் இராக, தாளங்களின் அளவுப் பரிமாணத்தை வெளிப்படுத்தின.

இசைக் கலைஞர் பலர் சாகித்தியத்தின் கருத்தை வெளிப்படுத்துவது குறைவு. இவரது பாடல்களில் சாகித்தியங்கள் உயிர்பெற்றுத் திகழ்ந்தன.

நம்நாட்டு நாதக்கலைஞர்கள் பலர் தலையாட்டியும் கைத்தாளமிட்டும்மகுடிக்குக் கட்டுண்டு ஒரே இடத்தில் வக்கரிக்காது குந்தியிருந்தார்களென்றால் நமது கருத்திலும் உண்மையிருக்கக்கூடுமல்லவா?

அதீதமான சாதனையின் மூலம் அநாயாசமாக உருப்படிகளைப் பொழிந்து தள்ளினார். ஏறத்தாழ மூன்றுமணி

வும் நிருபித்துவிட்டனர் திரு. ஆத்மானந்தனும் சளைக்கவில்லை.

இக்கச்சேரியை நல்ல இரசிகர்களுக்காக தனது இல்லத்தில் ஒழுங்குசெய்துதந்த சங்கீதவித்துவான் திரு பரம்தில்லைராசாவை பாராட்டாமலிருக்கமுடியுமா?

ஐயோ! கலைகளுக்கு விலங்குபோடும் விதிகளைவிட்டால் நமதுநாட்டுக் கலைஞர்கள் வெளியூர் கலைஞர்களின் கருத்துப் பரிவர்த்தனையின் மூலம் சிறந்து தேர்ந்து உயர முடியுமல்லவா?

உற்றகலைமடந்தைகற்றது கைமண்ணளவு கல்லாததுலகளவுஎன்று ஏன் கூறினாள் ?

கல்வியும் கலையும் எல்லையில்லாதனவாகும் அதற்கு எல்லைவகுப்பதால் கலைஞர்களின் வளர்ச்சிதான் பாதிக்கப்படுகின்றது.

நல்ல வெளிநாட்டு வித்துவான்களை வரவழைத்து பகிரங்கமான இசைக் கச்சேரியை வைப்பதற்கு முடியவில்லையே என்று ஒரு சில கலைஞர்கள் மனவருத்தப்பட்டனர்.

கலைஞர்களுக்கு கால்விலங்கு இடுகின்ற நிலைமாறி கலை உலகளாவிய தென்ற நல்லநிலை தோன்றப்பிரார்த்திப்போம்.

## நாவலர் விழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். தட்டாதெரு இந்து தமிழ் வித்தியாசாலையில் இன்று வியாழக்கிழமை நாவலர்விழா கொண்டாடப்படுகிறது.

இவ்விழாவில் சைவப்புலவர் செல்வி சி.சின்னத்தம்பு ஆசிரியர் சி. சீவரத்தினம், ஆசிரியர் மா. கந்தப்பு ஆகியோர் உரையாற்றுவர். மாணவர்களின் பேச்சும், திருமுறை இசையும் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடையுமென் பதைப் பற்றிய சரியான திட்டமெதுவுமில்லாததும் கட்சி அரசியல் காரணமாக அரசியல் ஆதாயத்தைக் கருதி இத் திட்டங்கள் பற்றித் தவருன பிரசாரம் தொடங்கப்பட்டதாலும் கச்சேரி முறை நீடித்து வருகிறது.

பழைய அனுபவங்களைக் கொண்டு கச்சேரி முறை மாற்றப்படுமென்று தேர்தல் விஞ்ஞாபனத்திலும், முதலாவது சிம்மாசனப்பிரசங்கத்திலும் வாக்குறுதியளித்திருப்பதைத் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு மிகப் பெரும்பான்மைப்பலம் இருப்பதாலும் கச்சேரி முறையை மாற்றுவதோ மக்களின்

மக்களுடன் கலந்து பழகி அவர்களின் குறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டிய தன் அவசியத்தையும் பிரதமர் எடுத்துக்கூறியிருக்கிருர்.

மக்களின் குறைநிறைகளையும் தேவைகளையும் அறிந்து கொள்ளாமல் அவற்றை நிறைவேற்ற முடியாது. மக்களின் உதவியும் ஒத்துழைப்புமில்லாமல் அந்தந்தப் பகுதியை விருத்திசெய்து அதன்மூலம் நாட்டை முன்னேற்ற முடியாது. இதனுல்தான் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுடன் மக்கள் குழுக்களும் அமைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# சோஷலிஸ நாடுகளுக்கு இலங்கைப் பழவகை

## ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

கொழும்பு, புதன்

பழம் அடைக்கும் தொழிலை விருத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்பட்டுவருகின்றன. இலங்கையின் ஏற்றுமதியில் அடைக்கப்பட்ட பழங்கள் முக்கிய இடம் பெற்றிருப்பதால் அந்தத் தொழில் பற்றிக்கூடிய கவனம் செலுத்தப்பட்டுவருகின்றது.

பழம் அடைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த விற்பனைத் திணைக்களம் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது. நாரஹென்பிட்டியாவில் பழம் அடைக்கும் தொழிற்சாலையை விரிவுபடுத்த திணைக்களப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துவருகின்றனர். அதிவிரைவில் விரிவுபடுத்துவதற்கான யந்திரங்கள் இறக்குமதிசெய்யப்படவிருக்கின்றன.

பழம் அடைக்கும் தொழிலுடன் சம்பந்தப்பட்ட பல வகையான யந்திரங்களுக்கு வெளிநாட்டில் விற்பனைத் திணைக்களம் ஓடர் கொடுத்துள்ளது

பழம் அடைக்கும் தொழிலை விருத்தி செய்வதன் மூலம் இலங்கைக்கு அதிக அந்நியச் செலாவணி கிடைக்கும். வெளிநாடு சென்று திரும்பிய வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின ரஷ்யா, யூகோஸ்லேவியா, கிழக்கு ஜெர்மனி மற்றும் சீன ஆகிய நாடுகளுக்கு அடைக்கப்பட்ட பழங்களை ஏற்றுமதிசெய்வதற்கான ஒப்பந்தங்களைச் செய்து திரும்பியுள்ளார்,

இலங்கையின் பழங்களுக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி இருக்கின்றதெனவும், ரஷ்யா இலங்கையில் அடைக்கப்பட்ட முழு அன்ஞசிப்பழத்தைக் கொள்வனவு செய்ய இருப்பதாகவும் தெரியவருகின்றது.

—...

## படகுச்சேவையை சீர் செய்க

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவு-குறிக்காட்டுவான் அரசாங்க படகு சேவை கடந்த பத்து தினங்களாக நடைபெறவில்லை. இப்படகுசேவை ஒழுங்காக நடைபெற வழிவகைகள் செய்யவும் நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவுக்கு நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் நெடுந்தீவு படகு சேவையின் சீர்கேடுகுறித்து அனுப்பி வைத்துள்ளார்.

அத் தந்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: இப்படகு சேவை சீர் ஒழுங்கில்லாததால் மக்கள் பாதுகாப்பற்ற வள்ளங்களில் பிரயாணம் செய்கிருர்கள். எனவே பாதுகாப்பான படகு சேவையை அளிக்கவும் பழுதடைந்துள்ள 4 படகுகளையும் திருத்தி சேவையிலீடுபடுத்தவும்.


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பெரும்பான்மையினராக இருக்கிருர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ திருச்சபைகள் உலகளாவிய ஸ்தாபனங்களைக் கொண்டு கல்விப் பணியிலும், இதர சமூகப் பணிகளிலும் பெரும் சேவை

அவர் மேடையில்வந்து உட்கார்ந்ததுமே சபைக்கு ஓர் அலங்காரப் பொலிவு ஏற்படும். ஆறடி உயரமான ஜானுபாகுவான தேகம், மந்தஹான வதனம், மழலைப் பேச்சு. சிறியவர் பெரியவர் என்றுபாராமல் எல்லோ

# றமழான் குரலொலி



"நீங்கள் உங்களது ரட்சகனிடம் மன்னிப்புத்தேடுங்கள். நிச்சயமாக அவன் அதிக அளவு மன்னிப்பவனுக இருக்கிருன். (அவ்வாறு செய்வீர்களாயின்) அவன் உங்கள்மீது தொடராக மழையை அனுப்புவான். மேலும் பொருள்களையு, மக்களையும் கொண்டு உங்களை அபிவிருத்தியடையச் செய்வான். மேலும் உங்களுக்காகத் தோட்டங்களை உண்டாக்கி உங்களுக்காக ஆறுகளையும் ஓடச்செய்வான். நீங்களென்ன? அல்லாஹ்விற்கு உள்ள கீர்த்தியை உணராமலிருக்கின்றீர்கள்."

## —:சதஹல்லாஹுல் அழீம்:—

(கலாமுல்லாஹ்: 71-ம் அத்தியாயம்: 10 முதல் 13 வரையுள்ள வசனம்)

பல்லாண்டு காலமாக நபி நூஹு (அலை) தனது காலமக்களை இறைவழிபாட்டின்பக்கம் அழைத்தும் அக்கால மக்கள் அவரது போதனையை ஏற்காதுவிட்டனர். அத்தோடு பிடிவாதக்கொள்கையுடையோராயும், பெருமையுடையோராயுமிருந்தனர். இப்பாவிகளினிடையே இறைவன் பஞ்சத்தை ஏற்படுத்திஞன். சுமார் நாற்பது ஆண்டுகள் வரை இப்பஞ்சம் நிலவியதால் மழையில்லை. அவர்களிடை பொருளில்லை. இன்னும் ஆங்குள்ள பெண்டீர் மலடிகளாய்ப்போய் பிள்ளைப் பேறு இல்லை. தோட்டம் தொறவுகளில் கனிவழமில்லை. இப்படி உருவெடுத்திருந்தது அப்பஞ்சம். அப்பொழுது நபி நூஹு (அலை) அவர்கள் மேலுள்ள வாக்கியங்களைக் கூறி இறை வழிபாட்டின் பக்கம் அழைத்தார்கள். இச்சம்பவத்தை இறைவன் திருக்குர்ஆனில் எமக்கு எடுத்துரைக்கின்ருன்-படிப்பினை அடைதற்கு.

ஹஸ்ரத் ஹசனுல் பஸரி (றஹ்) அவர்களிடம் ஒருவர் சென்று பஞ்சம் ஏற்பட்டிருப்பதாயும் இன்ஞெருவர் சென்று வறுமை ஏற்பட்டிருப்பதாயும், மற்ருெருவர் சென்று தனக்கு புத்திர பாக்கியம் இல்லை என்பதாயும் நான்காவதொருவர் சென்று பூமியின் விளைச்சல் அருகிவருவதாயும் முறையிட்டனர், நால்வரிடமும் (ஒரேவித பதில்) இஸ்திஃபார்- பாவ மன்னிப்புச் செய்துகொள்ளுங்கள் என்றே பதிலளித்தார்கள். அருகிலிருந்தவர் ஹஸனுல்பஸரியிடம் "நால்வரின் தேவைகளும் வெவ்வேருயும் தாங்களின் பதில் ஒரேவிதமாயும் இருக்கக் காரணமென்" என்றபொழுது அன்னுர் மேலுள்ள திருமறை வாக்கையே ஓதிக்காண்பித்தார்கள். என்னே இஸ்திஃபாரின் மகிமை. யாரப்பிஃபிர்லனு.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள்:-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-41 | 6-01 | 12-20 | 3-19 | 5-51 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-11 | 4-26 |

செய்துவிட்டு தமது 73-வது வயதில் நாதப்பிரம்மத்தில் கலந்து கொண்டார்

பக்க வாத்தியம் வாசிப்பதற்கு இது தான் இலக்கணம் என்பதை அவர் ஒவ்வொரு கச்சேரியிலும் எடுத்துக் காட்டி வந்தார் பாடுபவரின் திறமை முழுவதையும் பக்கவாத்தியத்திஞல் வெளிப்படுத்தும் இரகசியம் அவருக்குத் தெரியும் உற்சாகமாகவும் அனுசரணையோடும் வாசித்து கச்சேரி முழுவதையும் சோபிக்கச் செய்ய வேண்டுமென்பதே எப்பொழுதும் அவருடைய குறிக்கோள் வித்வான்பாடும்போது எப்பொழுது வாசிக்க வேண்டும், எப்படி வாசிக்க வேண்டும் என்பதை அவர் நன்ருக உணர்ந்திருந்தார். ராகம் பாடும்போது தாமும் கூடவே சேர்ந்து வாசித்து வாத்தியம் வாசித்தார். கச்சேரிகளை கட்டி நடத்துகொண்டிருந்தது, மணி ஏழரையாகிற்று. திடீரென்று நடுக் கச்சேரியில் பிள்ளையவர்கள் ஒன்றும் பேசாமல் மேடையை விட்டெழுந்து பின்பக்கம்போய் விட்டார். சபையில் ஒரே பரபரப்பு, ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. செம்மங்குடியாரும் முழித்தார். சிறிது நேரம்செல்ல பிள்ளையவர்கள் சௌடையாவை கையில் பிடித்து அழைத்து வந்து தம்முடைய இடத்தில் இருத்தி மாலை போட்டார். சபையில்பெரிய கரகோஷம். காலம் தாமதித்து வந்துசேர்ந்த சௌடையாவை பிள்ளையவர்கள் தான் முதலில்கண்டு தாமே நேரில் அழைத்து வந்தார்.

— வி. என். பி:

# யாழ். பொருட்காட்சி களியாட்டு விழா குழுக்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில்அடுத்த வருடம் ஜனவரிமாதம் யாழ் பொதுசன நூல் நிலைய கட்டட நிதிக்காக நடைபெறவிருக்கும் விவசாய கைத்தொழில் பொருட்காட்சி களியாட்டு விழாவிற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப்பொருட்காட்சியையும் களியாட்டு விழாவையும் நடத்துவதற்கு . ஒரு பொதுக்கமிட்டியும் மற்றும் 6 உபகமிட்டிகளும் தெரிவு செய்யப்பட்டது.

பொதுக்கமிட்டி உறுப்பினர்கள்: தலைவர் யாழ் மேயர் திரு. ரி. எஸ். துரைராஜா உபதலைவர்கள்: யாழ். எம். பி. திரு சி. எக்ஸ். மார்ட்டின் நல்லூர் எம். பி. சி அருளம்பலம் நியமன எம். பி, திரு. எம்' சி. சுப்பிரமணியம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், யாழ்' அரசாங்க அதிபர் திரு. எம் ரி, டபிள்யூ. அமரசேகரா. திரு. அல்பிரட் துரையப்பா எம். எம். சி. வணபிதா ரி. ஏ. மதுரநாயகம் இணைக்காரியதரிசிகள் திருவாளர்கள் ரி.முருகேசம்பிள்ளை (உதவி அரசாங்க அதிபர்) ஏ, விஸ்வநாதன் (எம், எம். சி.) உதவி காரியாதரிசிகள் திருவாளர்கள் ஹட்சன் செல்வராசா, எல். முத்துத்தம்பி இணைப் பொருளாளர்: திருவாளர்கள் ஏ. ரி, சுந்தரம் (மாநகர சபை கமிஷனர்) வி, தங்கவேலு (மாநகரசபைகணக்காளர்) உதவி பொருளாளர்: திருவாளர்கள் ஆர் இரத்தினராசா எஸ். பொன்னுத்துரை, திட்ட அமைப்பு பொறியியலாளர்: திரு. ஈ வைத்திலிங்கம் (மாநகரசபை மராமத்து பொறியியலாளர்)

நிதி, திட்ட அமைப்புகமிட்டி உறுப்பினர்கள்

திருவாளர்கள்: ரி. எஸ் துரைராஜா. ஜே, எம்: சபாரத்தினம், ரி.முருகேசம்பிள்ளை, ஏ, விசுவநாதன், வி. ஏ. சண்முகம், எஸ். சின்னத்துரை, கே. நேசையா, எப். நசுமுடீன், டி, பி. டபிள்யூ குணவர்த்தன, ஏ, நவரத்தினம், ஏ ரி சுந்தரம், வி தங்கவேலு, சிவ. உ சோமசேகரம், என் சிவசிதம்பரம் டாக்டர் வி நடராசா, டாக்டர் வி ரி பசுபதி டாக்டர் கே சிவஞானரத்தினம் குவாஸி எம் எம் சுல்தான்.

விளம்பரம்;பிரசார கமிட்டி உறுப்பினர்கள்

திருவாளர்கள் ஏ ரி. துரையப்பா (அமைப்பாளர்) ரி கே ராஜரத்தினம், எம் ஏ சி எஸ் ஏ காதர், ஏ நடராசா, என் மார்க்கண்டு என் ரி செத்லத்துரை, கே எஸ் நடராசா, டாக்டர் ஏ எல் ஏபிரகாம், திரு ஆர் பி தம்பையா, திரு ஜே ஜி அரசரத்தினம், திரு ஜே எல் திஸவீரசிங்கி, திரு ஈ மகாதேவா, திரு ஈ ஏ பிரகாசம் திரு என் புஷ்பரத்தினம், திரு எஸ் எம் கோபாலரத்தினம், திரு வி செல்லத்துரை, திரு எம் செல்வராசா.

உணவுநல அபிவிருத்திக் கமிட்டி உறுப்பினர்கள்

திருமதி அந்தோனியா சுவாமிநாதர், திருமதி டபிள்யூ எம் எல் தம்பு

மல்லவா?

அதிதமான சாதனையின் மூலம் அநாயாசமாக உருப்படிகளைப் பொழிந்து தள்ளினூர். ஏறத்தாழ மூன்றுமணி நேரத்தை நாம் பறிகொடுக்கும்படி செய்துவிட்டார் வித்துவான்.

இவ்வளவு இசைத்திறமை மிகுந்த மேதை 'சபாஷ், பலே' என்று பாராட்டக்கூடிய அளவுக்கு நம்மிடையேயும் பக்கவாத்திய வித்துவான்கள் உள்ளனர் என்பதை வயலின் வித்துவான் திரு. வி கே. குமாரசாமியும், கெஞ்சிரா வாசித்த வித்துவான் திரு கணேசு

திருமதி எஸ் பி நடராசா செல்வி எஸ் செல்லையா, திருமதி என் வி ஏ சண்முகம், செல்வி கே சரவணமுத்து, திரு வி சிவசுப்பிரமணியம் டாக்டர் ஆர் திருநாவுக்கரசு, திருமதி ஏ சி ஜெயசூரியா, திருமதி பி ஏ மில்ஸ், செல்வி எம் தம்பையா, திருமதி செல்லத்துரை. திருமதி சி சி ஹண்டி திரு கே இராசையா. திரு எல் கனகரத்தினம் திருமதி சாம், ஏ சபாபதி, திருமதி சி கே துரைரத்தினம் திரு எம் யூ ராவ். திரு வி எஸ் எஸ் கே சிவானந்தன்.

வரவேற்புக்கமிட்டி உறுப்பினர்கள்

திருவாளர்கள்: எஸ் நடராசா, ஏ துரைராசசிங்கம் ஈ சபாலிங்கம் எம் பாஸ்கரதேவன், ஏ போல்ராஜ், எஸ் ஜே வீரசிங்கம், ஜி நல்லையா, டாக்டர் என் சண்முகநாதன், டாக்டர் அன்ரன், சி ஜெயசூரியா டாக்டர் சத்தியமூர்த்தி, ஈ கே குமரையா, திருவாளர்கள் வி யோகேஸ்வரன், பி சிவஞானசம்பந்தன். ஏ நல்லையா. எஸ் பரம் தில்லைராசா, எம் செல்வராசா ராம் குமாரசாமி, கே நாகரத்தினம், திருமதி எஸ் பாக்கியராசா, திருமதி பி திவ்வியரஞ்சினி.

விளையாட்டு;

வாணவேடிக்கை கமிட்டி உறுப்பினர்

திருவாளர்கள்: எஸ். பி. நடராசா, என் தேவபாலசுந்தரம், எம் கிருபாகரன், எஸ் பொன்னம்பலம், ஈ கே குமரையா, எஸ் சிங்கராயா, முதலியார் சி முத்துத்தம்பி, கே வி தெய்வேந்திரன், ஜே எம் இராஜரத்தினம், எஸ் அந்தோனிப்பிள்ளை, எஸ் ஜே அன்ரனி, திருமதி குகநாதன்.

மற்றும்அலுவல்களுக்கான கமிட்டி உறுப்பினர்கள்

திருவாளர்கள் எஸ் பி சிற்றம்பலம், தம்பு கந்தையா. எம் எஸ் பேரின்பநாயகம்.

ஆசிரியர் ம... ஆகியோர் உரையாற்றுவர். மாணவர்களின் பேச்சும், திருமுறை இசையும் இடம் பெறும்.

— —

## 'சோஷலிஸ படிப்புக் கூடம்'

சாய்ந்தமருது, புதன்

கல்முனை சாகிருக்கல்லூரி மாணவ மாணவிகளின் நலன்கருதி மிக விரைவில் சுமார் 45 ஆயிரம் ரூபா செலவில் 'சோஷலிஸ படிப்புக்கூடம்' ஒன்று அமைக்கப்படவிருக்கின்றது'

கிழக்கிலங்கையில் முதன்முதலாக இக்கல்லூரியில் கட்டப்பட விருக்கும் இப் படிப்புக்கூடத்திற்கான பணம் கல்விப்பகுதியினுல் தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது இக்கூடம் புவியியல், விஞ்ஞானம், விவசாயம் ஆகிய முப்பிரிவுகளைக் கொண்டதாக இயங்கும் எனக் கல்லூரிஅதிபர் ஜனுப் எஸ். எச். எம். ஜமீல் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

— —

## "சோஷலிசக் கொள்கைக்கு மாருனது"

யாழ்ப்பாணம், புதன்

"சமீபத்தில் தங்கள்கல்வி அமைச்சினுல் செய்யப்பட்ட பட்டதாரிகள் நியமனம் ஒரு தலைப்பட்சமான முறையில் இருக்கிறது சிங்களப் பட்டதாரிகள் 2500 பேரும் தமிழ் பட்டதாரிகள் 103 பேரும் நியமனம் செய்யப்பட்டிருப்பது தங்களின் சோஷலிசக் கொள்கைக்கு முற்றிலும் மாருனதுமட்டும் அல்லாமல் தங்களையும் ஓர் வகுப்பு வாதி என்று தமிழ் மக்கள் கருதுவதற்கும் இடமேற்படுகின்றது" என அகில இலங்கைப் பட்டினசபை சமாஜத்தின் யாழ், மாவட்டப்பிரதிநிதி திரு ஆசீர்வாதம் ஹென்றி கல்வி அமைச்சருக்கு அனுப்பிய மகஜரில்குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சிறுபான்மை இனத்தைச்சேர்ந்த தாங்கள் கல்வி அமைச்சராக இருப்பது எம்மை மகிழ்வித்தபோதிலும் தமிழ்ப்பட்டதாரிகள் நியமனத்தில் சரியான நீதி கடைப் பிடிக்கப்படாதது எம்மைப்பெரும் கவலைக்குள்ளாக்குகிறது.

இவற்றை நிவர்த்திசெய்ய தாங்கள் தமிழ்ப்பட்டதாரிகளைக்கூடுதலாக உடனடியாக நியமனம் செய்வீர்களென எதிர்பார்க்கின்ருேம்" என மகஜரில்மேலும் கூறப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org